பக்கங்கள்-16 04.ஆடி.2021 விலை-30.00





# தினப்புயல்

news THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06





மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -351



## விடுதலைப்புலிகள் பயங்கரவாதிகள் அல்ல புரட்சியாளர்களே – சி.வி.விக்னேஸ்வரன்


## புதிய அரசியல் அமைப்பு சிங்களவர்களுக்கே சாதகமானது

## நாட்டு மக்களை பீதியில் ஆழ்த்தும் டெல்டா பிளஸ் வகை கொரோனா!

-இது தமிழ் பேசும் மக்களின் இதயத்துடிப்பு-

# விடுதலைப்புலிகள் பயங்கரவாதிகள் அல்ல புரட்சியாளர்களே - சி.வி.விக்னேஸ்வரன்

## பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களுடனான நேர்காணல்



### நேர்காணல் - ஓரியன்

**கேள்வி :- இன்றைய அரசியல் களத்திலே பயங்கரவாத தடைச்சட்டமானது இலங்கையிலே ஒரு பாரிய இக்கட்டான சூழ்நிலைக்கு கொண்டுபோயிருக்கிறது. மக்களிடையே பெரும் பரபரப்பையும் உலகெங்கும் வாழும் மக்களிடையேயும் பெரும் பரபரப்பையும் ஏற்படுத்தும் இந்த காலகட்டத்திலே உண்மையில் பயங்கரவாத தடைச்சட்டம் என்றால் என்ன, அது ஏன் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டது?**

**பதில் :-** 1979 ஆம் ஆண்டு JVP யினரின் புரட்சிக்கு ஈடுகொடுத்து தான் இது கொண்டுவரப்பட்டது. சந்தேகத்தின் பெயரில் இளைஞர் யுவதிகளை கைது செய்து பல நாட்கள் காவலில் வைத்திருக்கவும் சித்திரவதை செய்யவும் சாட்சியங்கள் இல்லாமல் வெறும் குற்ற ஒப்புதல் வாக்குமூலங்களை வைத்து குற்றவாளிகளாக கண்டு தண்டனை விதிக்கவும் இது உபயோகிக்கப்பட்டது. முதலில் சிங்கள இளைஞர் யுவதிகள் மீதும் அதன் பின்னர் தமிழ் இளைஞர் யுவதிகள் அவர்களுக்கு எதிராக இது பாவிக்கப்பட்டது பொதுவாக ஒருவரின் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பெரிய குற்றங்கள் சம்மந்தமாக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டார்கள். அவற்றை தகுந்த சாட்சியங்கள் மூலம் நிரூபிக்க வேண்டும் அதுதான் சட்டம். புரட்சியாளர்கள் அல்லது விடுதலைக்காக போராடுபவர்களுள் யாராவது அரச சாட்சியாக மாறினால் அல்லாமல் அவர்களின் குற்றங்களை நிரூபிப்பது சிரமமாக இருந்தது. பொதுவாக விடுதலை வீரர்கள் புரட்சியாளர்கள் தமிழர் எவரையும் காட்டிக்கொடுக்க மாட்டார்கள். அவர்கள் சுதந்திரத்திற்காகவும் கொள்கைகளுக்காகவும் போராடும் பொழுது சுயநலனிகளாக மாறமாட்டார்கள். அப்படி மாறினாலும் அவர்களின் சக புரட்சியாளர்களினால் போராளிகளினால சுட்டுக்கொல்லப்படுவார்கள். ஆகவே சட்டப்படி நிரூபிக்காது ஒருவரை குற்றவாளியாக்க இந்த குற்ற வாக்குமூலம் உதவியது. தற்காலிகமாக கொண்டுவரப்பட்ட சட்டம் தான் 1979 ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க பயங்கரவாத தடைச்சட்டம். எனினும் ஆத 1979 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரையும் தொடர்ந்தும் அமுலில் இருந்து வருகின்றது முதலில் JVP யினர் அதன் பின்னர் தமிழ் இளைஞர் யுவதிகளை பாதித்துவருகின்றது. குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை பற்றி நான் முக்கியமான ஒருதீர்ப்பை உச்ச நீதிமன்றத்தில் நாகமணி வழக்கில் நான் வழங்கியிருந்தேன் அது இதனுடன் தொடர்புடைய சம்பவம் என்பதனால் நான் அதை இந்த இடத்தில் கூற வேண்டியிருக்கிறது. அதாவது பயங்கரவாத தடைசட்டத்தின் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை மட்டும் வைத்து ஒருவரை குற்றவாளியாக்க முடியும் என்று அந்த சட்டத்தில் அவ்வாறு சொல்லப்பட்டிருந்தாலும் அந்த குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் நிகழ்வுகள் உண்மையாக நடைபெற்றனவா? என்று நிச்சயப்படுத்திக்கொள்வது நீதிமன்றத்தின் கடமை என்று நான் தீர்ப்பு வழங்கியிருந்தேன்.

ஒருவர் ஓ என்பவரை நான் தான் கொன்றேன் என்று குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை தருகின்றார் என்று வைத்துக்கொள்வோம் உண்மையில் ஓ கொல்லப்பட்டாரா உயிருடன் இருக்கின்றாரா? என்பது கண்டறியப்படவேண்டியது அவசியம் என்று நான் குறிப்பிட்டேன். அவர் தன்னுடைய குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் நான் இவ்வாறு செய்துவிட்டேன் என்று கூறலாம் ஆனால் அந்த குறிப்பிட்ட நிகழ்வு உண்மையாக நடைபெற்றதாஎன்றுஅறியப்படவேண்டிய கடப்பாடு நீதியரசருக்கு நீதிபதிக்கு உண்டு என்று நான் கூறியிருந்தேன். ஏனென்றால் ஓ உயிருடன் இருந்தால் எப்படிப்பட்ட குற்ற வாக்குமூலத்தின்படி அவரை குற்றவாளியாக்குவது என்று நான் கேட்டிருந்தேன். சிலவேளை அவர் ஓ ஐ கொன்றேன் என்று குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை கொடுத்தும் ஓ உயிருடன் இருந்தால் அதனை நாம் எவ்வாறு தண்டனைக்குட்படுத்துவது என்பது தான் என்னுடைய கேள்வியாக இருந்தது பல நீதிமன்ற நீதிபதிகள் இந்த தீர்ப்பை கவனத்தில் எடுத்து நடந்துகொண்டார்கள். எனினும் நான் உச்ச நீதிமன்றத்தில் இருந்தபோதே என்னை புலி நீதியரசர் என்றே அடையாளப்படுத்தி பல சிங்கள நீதிபதிகள் எனது தீர்ப்பை கவனத்தில் எடுக்காது புறக்கணித்திருந்தார்கள். அரசை எதிர்ப்பவர்களை கட்டுப்படுத்திவைக்க தான் இந்த பயங்கரவாத தடைச்சட்டம் உதவி வருகின்றது

**கேள்வி: இதுதொடர்பாக நீங்கள் பார்க்கின்ற பொழுது 30 வருட கால யுத்தத்தில் அதாவது 14 உள்ளூர் பேச்சுவார்த்தைகளும் 7 சர்வதேச பேச்சுவார்த்தைகளும் திம்பு முதல் டோக்கியோ வரை சர்வதேசத்துடன் இடம்பெற்றதை அறிவீர்கள். இவ்வாறிருக்கும் பொழுது விடுதலைப்புலிகளை பயங்கரவாதிகள் என அரசு இன்று முத்திரைகுத்தியிருக்கிறது. ஆகவே நீங்கள் நினைக்கின்றீர்களா விடுதலைப்புலிகள் பயங்கரவாதிகள் என்று?**

**பதில் :** பயங்கரவாதிகள் யார் என்று பார்த்தால் பலர் பலவிதமாக அவர்களை அடையாளப்படுத்துகின்றார்கள். பொதுவாக அரசியல் நோக்கங்களுக்காக வன்முறையில் ஈடுபடுவர்கள் பயங்கரவாதிகள் என இலங்கையில் அடையாளம் காட்டப்படுகின்றார்கள். 21 ஆம் திகதி அவர்கள் அரச காரணங்கள் இல்லாமல் மத சார்பான காரணங்களால் இருக்கின்றார்கள். பொதுவாக அரசியல் நோக்கங்களுக்காக வன்முறையில் ஈடுபடுபவர்கள் பயங்கரவாதிகள் என்று தான் நாங்கள் அடையாளம் காட்டுகின்றோம். ஆனால் அவ்வாறொரு விளக்கம் இல்லை. இவ்வாறான வகையில் தான் அதை ஏற்றுக்கொள்கின்றார்கள். அரசியல் நோக்கங்கள் என்னும்பொழுது எவற்றை பிழையான அரசியல் நோக்கங்கள் என அடையாளம் காண்பது ஒரு நாட்டின் அரசாங்கமும் அதன் அரச சட்டத்துறை சட்டவாளர்களும் தான். நான் எனது சொந்தகாரனை அடித்திருந்தால் அதுவும் அரச நோக்கத்திற்காக தான் அடித்தேன் என்று கூறினால் அதை பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கொண்டுவரலாம் என்பதுதான் கேள்வி. நாட்டின் பொதுவான சட்டத்தின் கீழும் வன்முறையில் ஈடுபடுபவர்களை அரசானது தண்டிக்கின்றது ஒருவர் இன்னொருவரை கொன்றால் அரசு கொன்றவரை தண்டிக்கின்றது இது சாமாண்ய சட்டத்தின் கீழ் நடைபெறுகின்றது. பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழும் ஒருவர் இன்னொருவரை கொன்றால் அவர் தண்டிக்கப்படுகின்றார். அந்த சட்டத்தின்கீழ் கொலை செய்பவரை பயங்கரவாதிகள் என அடையாளப்படுத்துபவர்கள் யார் என்று பார்த்தால் அரசும் அரசின் கையாற்களும் தான் அதை செய்கின்றார்கள்.

ஆகவே பயங்கரவாதிகள் என்பவர்கள் அரசின் உருவாக்கம் என்பதுதான் எனது கருத்து. உண்மையில் பயங்கரவாதிகள் என்று எவருமே இல்லை. நாங்கள் தான் அவர்களை பயங்கரவாதிகள் என்று ஒரு போர்வைக்குள் கொண்டுவருகின்றோம். அரசு நினைத்தால் அவர்கள் பயங்கரவாதிகள் அரசுமறுத்தால்அவர்கள் சாமாண்யர்கள் இது தான் தற்பொழுது இருக்கும் நிலை. விடுதலைப்புலிகள் நாட்டை கூறுபோட வன்முறையில் இறங்கியதால் அரச சித்தார்ந்தத்தின் படி அவர்கள் பயங்கரவாதிகள். சட்டப்படி தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமையை பெற்றவர்கள் போன்ற கருத்துக்களை இலங்கை சிங்கள பெரும்பான்மையின அரசுகள் செவிமெடுக்கமாட்டார்கள். அவர்களுக்கு முக்கியமானது நாட்டை பிரிக்க நினைத்தார்கள் வன்முறையில் பிரிக்க நினைத்தார்கள்.

எனவே இவை இரண்டும் சேர்ந்ததால் தான் அவர்கள் பயங்கரவாதிகள் என அடையாளப்படுத்தினார்கள். இதனால் தான் நான் ஆங்கில கட்டுரை ஒன்றில் வெள்ளையர்களை எதிர்த்த கெப்பட்டிபொல என்ற சிங்கள குருநில தலைவர் சுதந்திர வீரனா அல்லது பயங்கரவாதியா என்று கேள்வி எழுப்பி பயங்கரவாதி ஒருவருக்கு தென்னிலங்கையில் சிலைகள் எங்கனும் எழுப்புவதன் மர்மம் என்ன என கேட்டிருந்தேன். அவரை விடுதலை வீரர் என்று சொன்னால் எமது விடுதலை இயக்கமும் வீரர்கள் தானே என நான் அந்த கட்டுரையில் கூறியிருந்தேன். அவர்களிடமிருந்து பதிலில்லை ஆனால் இணையதளத்தில் என்னை வைது தள்ளினார்கள். அவரை நீங்கள் பாரிய வீரர் என்று கூறுகின்றீர்கள் அவர் பிரிட்டிசாருக்கு எதிராக போரிட்டவர் ஆனால் இவர்களும் தங்களுடைய சுதந்திரத்திற்காக போராடினார்கள் இவர்கள் ஏன் பயங்கரவாதிகள் என்ற கேள்வியை கேட்டிருந்தேன். விடுதலைப்புலிகள் சிங்கள அரசாங்கங்களின் பார்வையில் பயங்கரவாதிகள்ஆனால்பெரும்பான்மை தமிழ் மக்களின் பார்வையில் அவர்கள் விடுதலை வீரர்கள். இது தான் இன்றைய நிலை.

தொடரும்...

தினப்புயல்
ஆசிரியரபீடம்
இல:154 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## "ஒன்றுப்பட்டால் உண்டு வாழ்வு"

மூவின மக்களும் வாழும் இலங்கையில். தமிழினம் சிங்களப் பெரும்பான்மை இனத்தின் ஆட்சியாளர்களால் இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்து அனுபவித்துவந்த இன்னல்கள் கொஞ்சநஞ்சமல்ல என்பது யாவருக்கும் தெரியும். சிங்களப் பேரினவாதிகளால் எதிர்கொண்ட அடக்குமுறைகளின் வெளிப்பாடாகத்தான் தமிழ் இளைஞர். யுவதிகள் தங்களது வாழ்வைத் தியாகம் செய்தனர் என்பது உலகளவில் தெரிந்த உண்மை.

விடுதலைப்புலிகளின் போராட்டம் சர்வதேச நாடுகளின் உதவியுடன் இலங்கை அரசினால் அழித்தொழிக்கப்பட்டு. சுமார் பத்து வருடங்களுக்கு மேலாகியும் தமிழ் மக்கள் இன்னமும் வடகிழக்கில் அச்சுறுத்தலுடன் வாழவேண்டிய சூழல் நிலவுகிறது. இன்றும் தமது நிலம் பறிபோய்விடுமோ என்கிற அச்சம் இல்லாமலில்லை. தமிழர் பிரதேசங்களை அபகரித்து பௌத்த மயமாக்குவதற்கான திட்டங்கள் தொடர்ச்சியாக நடந்தேறியவண்ணம் இருக்கின்றது. தென்னிலங்கை ஒருபோதும் தமது இவ்வாறான நிகழ்ச்சிநிரலை கைவிடாது என்பது நடக்கின்ற சம்பவங்களினூடாக அறிய முடிகின்றது. காணாமல் போனோருக்கான தீர்வு இன்னமும் எட்டப்படாத நிலையில் போராட்டங்கள் தொடர்ச்சியாக நடைபெற்றுக்கொண்டிருப்பதை காணக்கூடியதாக இருக்கின்றது.

இந்நிலையில் தான் விடுதலைப்புலிகளால் ஒரு கட்டுக்கோப்புடன் அனைத்து அரசியல்வாதிகளையும் இணைத்து பயணித்த தமிழ் தேசிய கூட்டமைப்பின் அரசியல் பாதை இன்று தவிடுபொடியாகியுள்ளது. ஆளாளுக்கு ஒரு கட்சியை ஆரம்பித்து வைத்துக்கொண்டு. அரசியல் செய்ய ஆரம்பித்துவிட்டனர். ஆனால் பயன் ஒன்றுமில்லை. அன்றிருந்த தமிழர் பிரச்சினைகள் இன்றும் தொடர்கின்றது.

இன்றும் ஓரணியில் இணைந்து செயற்பட தமிழ்க் கட்சிகள் தயாரில்லை. பழைய குரோதங்களை மனதிற்கொண்டும். கருத்து முரண்பாடுகளாலும் தமிழர் பிரிந்தே செயற்படவேண்டிய நிலை காணப்படுகின்றது.தமிழ் அரசியல்வாதிகள் ஒற்றுமையாக சேர்ந்து தமிழ்மக்களுக்கான முடிவுகள் எடுக்கமுன்வராத போது நாம் எவ்வாறு எமது எதிர்கால அரசியல் பயணத்தை முன்கொண்டு செல்ல முடியும். எமது பிளவுகள் தான் அரசிற்கு சாதகமாக அமைந்துள்ளது.

வருகின்ற அரசிற்கு ஏற்றாற்போல் ஒவ்வொரு தமிழ் அரசியல்வாதிகளும் செயற்ப்பட்டுக்கொண்டிருக்கின்றதை கண்கூடாக பார்க்க முடிகின்றது. அதற்கும் இந்தப் பிளவுகளும். ஒற்றுமையில்லாத்தன்மையும் தான் காரணம். பேரம் பேசும் சக்தியாக இன்று நாம் இருக்கின்றோமா என்றால் கேள்விக்குறிதான். ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என யாரும் விளையாட்டாகச் சொல்லவில்லை என்பதை எமது கட்சிகள் உணர்வது எப்போது?

# உலக வரலாற்றில் குறுஞ்சமர்

154

பிற மக்கள் வாழ்விடத்தில் நகரத்தில் நடமாடும் போது, கெரில்லாக்கள் அதியுச்ச விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். அந்தப் பிரதேசத்திற்குப் பொருத்தமான உடையுடனேயே நடமாடவேண்டும். வீட்டிலிருந்து வெளியேறும்போது, சுற்றிவரப்பார். ஒரே ஆட்களைத் தொடர்ச்சியாகச் சந்திக்காதே. ஊன்னை யாரும் பின்தொடர்கின்றார்களா என்பதை அவசியம் பரிசோதி.

**வேவுத் தகவல்களைப் பெறும் வழிகளும் மூலங்களும்**

எதிரியைப் பற்றிய வெவ்வேறு தகவல்களையும் அவனது நோக்கங்களையும் முன்கூட்டியே அறிதல் - கெரில்லாப் போரை ஒழுங்குபடுத்துகின்ற அதனை மேற்கொள்கின்றவேலைத்திட்டத்தின் பிரதான பணிகளில் ஒன்றாகும். துகவல்களைப் பெறுவதற்காகச் (சேகரிப்பதற்காக) சகல சாத்தியமான மூலங்களையும் பயன்படுத்தவேண்டும்.

**மூலங்கள்**

தொலைபேசித் தந்தித்தொடர்பு, ஏனைய தொழிநுட்பத் தொடர்புச் சாதனங்கள், ஆங்சல்.

மக்கள்(வேலைத்தளவேலையாட்கள், கிராம மக்கள், ஆடுமேய்ப்பவர்கள், வாகனச் சாரதிகள், வியாபாரத் தொழிலாளர்கள் போன்றோர்)

கெரில்லாக் குழுவிடமிருந்து அனுப்பப்படுகின்ற தொடர்பாளர்கள் (வேவுக்காரர்கள்)

புதிப்புகள் (பத்திரிகைகள், சுஞ்சிகைகள், பிற வெளியீடுகள்)

**பல்வேறு வகையான ஆவணங்கள்**

ஏதிரியின் பல்வேறு அமைப்புக்களுக்குள்ளும் இராணுவம் மற்றும் காவல்துறைக்குள் புகுந்திருக்கினற கெரில்லாக்களின் முகவர்கள், நகரங்களிலும் கிராமங்களிலும் வசிக்கின்ற முகவர்கள், கட்டுமான வேலைத்தளங்களிலும் தொழிற்சாலைகளிலும் மின்சார நிலையங்களிலும் தொழில்பார்க்கும் ஆட்கள் போன்றோர்களிடமிருந்தாகும்.

**தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் வழிவகைகள்**

தொலைபேசிமற்றும்தந்தித்தொடர்புக் கம்பிகளினூடாக சங்கேதப் பரிவர்த்தனைகள், சங்கேத அஞ்சல் கடிதங்கள்.

பதிப்புக்களின் பிரதான வெளியீடுகளிலுள்ள குறியீட்டுச் சொற்கள்

ஆவணங்களைக் களவாடலும் ஆவணங்களைப் பிரதியெடுத்தலும்

நிறுவனங்களின் பணியாளர்களுக்கிடையிலான,



தொழிற் சாலைகளின் பணியாளர்களுக்கிடையிலான, கிராம மக்களுக்கிடையிலான, சந்தைகளில் வியாபாரிகளுக்கிடையிலான உரையாடல்களை ஒற்றுக்கேட்டல்.

இராணுவப் பிரிவுகள், படைப்பிரிவுகள், காவற்றுறையினர் போன்றோர் இருக்கின்ற இடங்களைக் கண்காணித்தல் போன்றன.

**விழிப்புணர்ச்சி**

கெரில்லா அமைப்பு வளர்ச்சியடைய, எதிரி அதனை ஒடுக்குவதற்கான சகல நடவடிக்கைகளையும் எடுப்பான். இங்கே தீவிரமாகக் காவற்றுறை செயற்படும். குாவல்துறை தனது முகவர்களைக் கெரில்லாக் குழுக்களுக்குள்ளும் கிராமங்களுக்கும் நிறுவனங்களுக்கும் ஏனைய பலவற்றிற்கும் அனுப்புகின்றது. எதிரியின் முகவர்கள் வேரூன்றி, நன்றாகத் தயார்ப்படுத்தப்பட்ட மறைப்புக்கதையுடன் செயற்படுவார்கள். எதிரி தன்னுடன் குற்றம் கொல்பவர்களையும் (கோள்மூட்டிகளையும்) தகவலாளர்களையும் தொடர்பாளர்களையும் சேர்த்துக்கொள்வான். இதற்காக அவன் சமூகத்தின் கெட்ட காரணிகளைப் (போதையடிமைகள், குடிகாரர்கள், நாடோடிகள், வேலையற்றவர்கள், கொள்கைத் திடமற்றவர்கள்) பயன்படுத்துவான். ஆகவேதான், கெரில்லாக்கள், அவர்களுக்கு ஒத்துழைக்கின்ற மக்கள் ஆகியோர்உச்சவிழிப்புணர்ச்சியுடனும் அவதானத்துடனும் சமயோசிதத்துடனும் இருக்கவேண்டும்.

இவற்றை நினைவிற்கொண்டு, கெரில்லாக்கள் பொது இடங்களில் அறிமுகமில்லாத, நம்பகரமற்றவர்கள் மத்தியில் தமது கடமைகளைப்பற்றியும் அத்துடன். அரசியல் மற்றும் சமூக விடயங்களைப் பற்றியும் ஒருபோதும் உரையாடக்கூடாது. ஒற்றுக்கேட்கச் சாத்தியமற்ற தங்குமிடங்களாக இருந்தாலும், அதற்கான சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்ட பின்னர் மாத்திரமே உரையாடலை மேற்கொள்ளலாம்.

("போர்வீரரின் வெற்றி" எனும் சஞ்சிகையில்வெளியானவற்றிலிருந்து சுருக்கங்களுடன புதிதாகத் தொகுத்துத் தரப்பட்டுள்ளது)

ஆப்கானிஸ்தானில் கெரில்லாப் போர் கியோர்கிபுறூஜெரர்

**போரின் ஆரம்பம்**

இருபதாம் நூற்றாண்டின் அறுபது களில் ஆப்கானிஸ்தானிய அரசில் (மிகவும் பின்தங்கிய அரை நிலவுடைமைச் சமுதாய நாட்டில்) நூர் முகம்மது தராகியின் தலைமையில் கம்யூனிசக் கட்சி உருவாக்கப்பட்டது. 1967ஆம் ஆண்டு இந்தக் கட்சி கால்க் (மக்கள்), பர்சாம் (கொடி)என இரண்டாகப்பிளவுபட்டது. சோவியத் சார்புப் பிளவுக் கட்சியான பர்சாமை அரச இராணுவ ஜெனரலின் மகன் பப்ராக் கர்மெல் தலைமை தாங்கினான்.

1973 யூன் 17ஆம் நாள் அரசனின் ஒன்றுவிட்ட சகோதரன் முகம்மது டாவுட்கான் புரட்சியை ஏற்படுத்தி. மன்னராட்சியை முடிவுக்குக் கொண்டுவந்தான். ஐந்து ஆண்டுகள் சென்றபின், கம்யூனிசக் கட்சியின் இரண்டு பிளவுக் கட்சிகளும் ஆப்கானிஸ்தானியமக்கள்சனநாயகக் கட்சியென ஒன்றுசேர்ந்து, 1978 ஏப்ரல் 27ஆம்நாளன்றுபுதியதொருபுரட்சியை நடத்தியது. டாவுட்டுக்கும் அவனது குடும்பத்தைச் சேர்ந்த 30 பேருக்கும் மரண தண்டனை வழங்கப்பட்டது. நாட்டின் சனாதிபதியாகத் தராகியும் துணை சனாதிபதியாகக் கர்மெல்லும் பொறுப்பேற்றனர்.

இதே ஆண்டில் ஆப்கானிஸ்தானிய மக்கள் சனநாயகக் கட்சியின் இரண்டு பிளவுக்கட்சிகளும் மீளவும் பிரிந்துசென்றன. தராகி ஆப்கானிஸ்தானை நவீன சோசலிச நாடாக மாற்றும் திட்டத்தை அறிவித்தான். அவன் சோவியத் ரசியாவிடம் பொருளாதார, நிதி உதவிகளைக் கோரினான். சோவியத் ரசியாவிலிருந்து ஆயிரக்கணக்கான ஆலோசகர்கள் வந்தார்கள். நில, சமுதாய, கல்விச் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தத் தராகி முயற்சித்தான். ஆனால், அது வெறும் கற்பனையாகவே இருந்தது. கால்க் பிளவுக் கட்சியாலோ பர்சாம் பிளவுக் கட்சியாலோ மதவெறி பிடித்த முஸ்லிம்கள் மத்தியில் தமது செல்வாக்கைப் பரப்ப முடியவில்லை. ஆப்கானிஸ்தானியமக்கள்ஜனநாயகக் கட்சி உறுப்பினர்கள் தமது அனுதாபதாரர்களுடன் சேர்த்து நாட்டு மக்கள் சனத்தொகையில் 0.5 வீதத்திற்குக்குறைவாகவே இருந்தனர். பிரதானமாக அவர்கள் அதிகாரிகளா-கவும் கட்சி உறுப்பினர்களாகவும் அறிவுஜீவிகளாகவுமே இருந்தனர்.

**நெற்றிபொறியன்**

**தொடர்வான்...**

# நாட்டு மக்களை பீதியில் ஆழ்த்தும் டெல்டா வகை கொரோனா!

இன்று உலக நாடுகளே கொரோனா வைரசினால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், இலங்கையில் இவ் வைரசின் தாக்கம் தற்போது தீவிரமடைந்துவருவதைக் காண முடிகிறது. அதேநேரம் ஒவ்வொரு மாவட்டங்களிலும் தடுப்பூசிகளை செலுத்தும் அரசின் வேலைத்திட்டமும் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

சர்வதேச ரீதியாக பலம் வாய்ந்த நாடுகள், அபிவிருத்தியடைந்த நாடுகள் என இவ் வைரஸ் தொற்றினைக் கட்டுப்படுத்த இயலாமல் தடுமாறிவருகின்றன. இவ் வைரசினுடைய வீரியம் மேலும் மேலும் அதிகரித்துவருகிறதே ஒழிய, கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட முடியவில்லை.

உலக நாடுகள் பலவிதமான தடுப்பூசிகளை கண்டுபிடித்து அதனை தத்தமது நாட்டு மக்களுக்கு செலுத்தியும் வருகின்றன. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு வழங்கியும் வருகின்றன. இன்னமும் தடுப்பூசிகள் தொடர்பில் ஆராய்ச்சிகள் உலகளாவிய ரீதியில் நடைபெற்று வருகின்றன. இதேவேளை தடுப்பூசிகளைச் செலுத்திக்கொண்டவர்களும் இக் கொரோனா வைரசினால் பாதிக்கப்படும் நிலையும் ஏற்பட்டுள்ளது. எனினும் தடுப்பூசிகள் பாதுகாப்பானது என்கிற ரீதியில் அனைவரையும் உடனடியாகத் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ளுமாறு வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

அதேவேளை, டெல்டா வகை கொரோனா தொடர்ந்து உருமாற்றம் அடைந்து வருவதால், அது குறித்த விரிவான ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும் என உலக சுகாதார அமைப்பின் தலைவர் கூறியுள்ளார்.

பாதிப்புகளை ஏற்படுத்தி வரும் கொரோனா வைரஸ், தொடர்ந்து உருமாற்றம் அடைந்து வருவதால் இதன் தீவிரத்தை கணிக்க முடியாத நிலை உருவாகியுள்ளது. கொரோனா வைரஸ் கிருமியானது, அது கண்டறியப்பட்ட காலத்தில் இருந்து தற்போது வரை பல்வேறு நாடுகளில் அல்பா, பீட்டா, காமா, டெல்டா, டெல்டா பிளஸ் என தொடர்ந்து உருமாற்றம் அடைந்து வருகிறது.

இதில் தற்போது அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருகிறது டெல்டா வகை வைரஸ். இந்தியாவில் மிக வேகமாக பரவி அதிக பாதிப்புகளையும், உயிரிழப்புகளையும் ஏற்படுத்திய டெல்டா வைரஸ், உலகம் முழுவதும் ஏராளமான நாடுகளில் பரவியுள்ளது. இந்த டெல்டா வகையை தொடர்ந்து தற்போது டெல்டா பிளஸ் வகை கொரோனா பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருகிறது. இந்த நிலையில் உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதனோம், கொரோனா தொற்றின் டெல்டா மாறுபாடு கிட்டத்தட்ட 100 நாடுகளில் பரவியிருப்பதால், தொற்றுநோயின் மிகவும் ஆபத்தான காலகட்டத்தில் உலகம் உள்ளது என எச்சரித்துள்ளார். இந்த ஆபத்திற்கு எந்த ஒரு நாடும் விதிவிலக்கு அல்ல என்றும், டெல்டா வகை கொரோனா தொடர்ந்து உருமாற்றம் அடைந்து வருவதால், அது குறித்த விரிவான ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டியது அவசியம் என்றும், தடுப்பூசிகள், மருத்துவ உபகரணங்கள் ஆகியவற்றை உலக நாடுகளுக்கு இடையே பகிர்ந்து கொள்வதன் மூலம் நாம் இந்த பாதிப்புகளை கட்டுப்படுத்த முடியும் என்று தெரிவித்துள்ள அவர், இந்த ஆண்டு செப்டம்பர் மாதத்திற்குள் அனைத்து நாடுகளிலும் குறைந்தபட்சம் 10 சதவீத மக்களாவது கொரோனா தடுப்பூசி செலுத்தியிருப்பதை உலக நாடுகளின் தலைவர்கள் உறுதி செய்ய வேண்டும் என கேட்டுக்கொண்டுள்ளார்.

இலங்கையில் தற்போது பதிவாகும் மரணங்களின் எண்ணிக்கை அதிகரித்தவண்ணமே உள்ளது. இது ஒரு நாளைக்கு சராசரியாக 100 என்கிற உச்சத்தைத் தொடும் எனவும் கூறப்படுகிறது. மக்கள் மிகக் கடுமையாக சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றவேண்டிய தேவை இருக்கிறது. எனினும் இலங்கையில் ஊரடங்கு சட்டம் மற்றும் பயணத் தடைகளால் தான் இவ் தொற்றுநிலைமையினை குறைக்க முடியும் என்கிற சூழல் இருக்க, மக்களது பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. நாட்டில் திடீரென அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம் மேலும் சிரமத்தை ஏற்படுத்தியுள்ளது. மக்கள் வேலைவாய்ப்பினை இழந்து தவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

டெல்டா திரிபு வைரஸ் கொழும்பு உள்ளிட்ட மேலும் சில பிரதேசங்களில் பரவியுள்ளமை இனங்காணப்பட்டுள்ள நிலையில் அந்த வைரஸ் தொற்றாளர்கள் தொடர்ந்தும் அடையாளம் காணப்பட்டு வருகின்றனர். எனினும் மக்களின் அலட்சியப் போக்கினால் மேற்படி தொற்று விரைவாக நாடு முழுவதும் பரவக்கூடிய அபாயம் காணப்படுகிறது. இத்தகைய சூழ்நிலையில் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் மேலும் துரிதப்படுத்தப்பட வேண்டும். இதேவேளை, நாட்டில் அமுலிலிருந்த பயணக் கட்டுப்பாடுகள் மீதான தளர்வு எதிர்வரும் 19 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்து தடையானது, 05 முதல் 14 நாட்களுக்கு அமுலிலிருக்கும் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், வைத்தியர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.





அத்தியாவசியமான தேவைகளுக்கு மாத்திரம் செல்வோர் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர். தொழிலுக்காக பிற மாவட்டங்களில் வசிப்போர் இதனால் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. பிற மாவட்டங்களில் தங்கி வேலை செய்து வந்தோர் இன்று வீடுகளில் முடங்கிப்போயிருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

பொதுப் போக்குவரத்து சேவைகளில் ஆசனஎண்ணிக்கையில் 50வீதமானோர் மாத்திரமே பயணிக்க முடியும். மேல் மாகாணத்தில், ஆசன எண்ணிக்கையில் 30 வீதமானோர் மாத்திரம் பயணிக்க முடியும்.

தனியார் அல்லது வாடகை வாகனங்கள் மற்றும் முச்சக்கரவண்டிகளில் ஆசன எண்ணிக்கைக்கேற்பபயணிகளைஏற்றிச் செல்ல முடியும். திருமண நிகழ்வுகளை நடத்த அனுமதியில்லை, எவ்வாறாயினும் மணமகன் மற்றும் மணமகள் உள்ளிட்ட 10 பேரின் பங்குபற்றலுடன் பதிவுத் திருமணத்தை நடத்த அனுமதி.

ஒருவர் உயிரிழந்தால், சடலத்தை பொறுப்பேற்று 24 மணித்தியாலங்களில் இறுதிச் சடங்குகளை முன்னெடுக்க வேண்டும், இறுதிக்கிரியைகளில் 15 பேர் மாத்திரமே கலந்துகொள்ள முடியும்.

திரையரங்குகள், பூங்காக்கள், கடற்கரைகள், நீச்சல் தடாகங்கள், மதுபானசாலைகள், கெசினோ மற்றும் இரவுநேர களியாட்ட விடுதிகள், சூதாட்ட நிலையங்கள் என்பன தொடர்ந்தும் மூடப்படும், மசாஜ் நிலையங்களை திறக்க அனுமதி.

உள்ளிட்ட விடயங்கள் அடங்கிய புதிய சுகாதார வழிகாட்டல் கோவை சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளது. மக்கள் மிக அவதானமாக எதிர்வரும் நாட்களில் செயற்படவேண்டியது அவசியம் என்பது மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்பட்டு வருகின்றது. மேல் மாகாணத்தில் 30 வயதுக்கும் மேற்பட்டோருக்கு இன்று முதல் தினமும் காலை 8.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை தெரிவு செய்யப்பட்டஇராணுவ வைத்தியசாலைகளில் கொரோனா தடுப்பூசி ஏற்றப்படும் எனவும் இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

எது எவ்வாறெனினும் நாட்டு மக்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் அரசிற்கு இருக்கிறது. ஆட்சிக்கு வந்த கோட்டபாய ராஜபக்ஷ தலைமையிலான அரசு, இன்று பாரிய நெருக்கடிகளைச் சந்தித்திருக்கிறது.

கொரோனா வைரஸ் ஒருபக்கம், நாட்டைப் பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மீட்டெடுக்கவேண்டும் என்கிற பிரச்சினைகள் தலைதூக்கியுள்ளதுடன், ஆட்சியிலிருக்கும் கட்சிகளுக்குள்ளேயே இன்று விரிசல் ஏற்படும் நிலைமையும் தோன்றியுள்ளது. குடும்ப ஆட்சி பல சிக்கல்களை நாட்டில் கொண்டுவந்துள்ளது. நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி ஜனாதிபதி இராணுவத்தினரை நாட்டில் அனைத்துத் துறைகளுக்குள்ளும் உயர் பதவிகளில் நியமித்திருப்பதானது அரசின் மீதான அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

அரசிற்கு எதிராக தென்னிலங்கையிலும் போர்க்கொடி தூக்கியுள்ளனர். பௌத்த தேரர்கள் குழப்பமடைந்துள்ள நிலையினைக் கூட காணமுடிகின்றது. சீனாவினது ஆதிக்கம் இலங்கையில் அதிகரித்துள்ளமை குறித்து விமர்சனங்கள் எழ ஆரம்பித்துள்ளது. ஏற்கனவே பொருளாதார ரீதியாக பாரிய பின்னடைவைக் கொண்டிருக்கும் இலங்கை, இன்று நிலைமைகள் மேலும் மோசமாகும் அளவிற்கு அரசினது செயற்பாடுகள் உள்ளதாகவும், கொவிட் செயலணி முற்றாக செயலிழந்துபோயுள்ளது என பாராளுமன்றில் கூச்சலிடும் அளவிற்குச் சென்றுள்ளதைக் காண்கிறோம். கடந்த காலங்களைவிட தற்போது அந்நிய நாடுகளின் ஆதிக்கம் இலங்கையில் அதிகரித்து வருவதைக் காணக்கூடியதாகவிருக்கிறது. நாட்டு மக்கள் மீது கடன்சுமை அதிகரிக்க, ஆட்சியாளர்கள்சொகுசுவாழ்க்கைவாழும் நிலைக்கு மக்கள் முற்றுப்புள்ளி வைக்கும் காலம் வெகுதொலைவிலில்லை.

**சசிகரன்**

# இலங்கை அரசியல் தீர்வுத்திட்டத்தில் மூக்கை நுழைத்துள்ள விசமிகள்-உலக பூகோள அரசியல்



உலக பூகோள அரசியல் பந்தில் முதல் வல்லரசாக அமெரிக்காவும், உலகப் பொருளாதாரத்தில் மூன்றாவதாக சீனாவும், உலகத் தரைப் படையில் 04வதாக இந்தியாவும் திகழ்கிறது. ஒரு கட்டத்தில் அமெரிக்காவை தோற்கடித்து முதல் நிலைக்கு வந்தது சீனா. பின்னர் அதனை சீர் செய்துகொண்ட அமெரிக்கா வட கொரியாவுடனான அணுவாயுத ஒப்பந்தத்தை சீர்செய்து பூகோள அரசியலில் தன்னை ஒரு ஸ்திரமான நிலைக்கு மாற்றிக் கொண்டது.

அமெரிக்காவைப் பொறுத்தவரை அங்கு ஆட்சி செய்யும் ஜனாதிபதிக்கு பொறாமை என்பது இல்லை. வெற்றி பெற்றவர் தனது ஆட்சி காலம் வரை நாட்டின் இறைமைக்கும், பாதுகாப்பிற்கும் குந்தகம் ஏற்படாத வண்ணம் செயற்படுவார். **C.I.A** எனப்படும் அமெரிக்காவின் புலனாய்வுக் கட்டமைப்பு அந் நாட்டையும் ஏனைய நாட்டையும் தமது கட்டுக்கோப்புக்குள் வைத்துள்ளது. அது போன்று ஆசியக் கண்டத்தில் இந்தியா, சீனா போன்ற நாடுகள் ஆதிக்கம் செலுத்துகிறது. இலங்கைத் தீவின் தமிழ் இனத்தின் விடுதலைக்காக போராடிய தமிழீழ விடுதலைப்புலிகளையும், ஏனைய தமிழ் ஆயுத இயக்கங்களையும் ஆரம்பகட்டத்தில் ஆயுதங்களை வழங்கிப் போராட களமிறக்கியது இந்தியா. இது இவர்களது சுயலாப அரசியலை எடுத்துக்காட்டுவது மட்டுமல்லாது, இந்தியாவைத் தவிர எந்தவொரு நாடும் இலங்கையில் கால் பதித்துவிடக்கூடாது என்பதில் இவர்கள் குறியாக இருக்கின்றார்கள்.

ஆயுதப் போராட்டக் குழுக்களை வளர்த்த இந்திய அரசாங்கம், வட-கிழக்கு தமிழர் தாயகத்தைப் பிடித்துக் கொடுப்பதற்காகவே 1987ம் ஆண்டு இந்திய இராணுவத்தை இலங்கையில் களமிறக்கியது. இவ்வாறான ஒரு சூழ்நிலையில் தமிழினத்துக்கு தமிழர் தாயகம் வழங்கப்பட்டால் சிங்களவருக்கு பாதிப்பை ஏற்படுத்துமென சிங்கள அரச தலைவர்களான **J.R** ஜெயவர்தன, ரணசிங்க பிரேமதாசாவும் இணைந்து தமிழ் ஆயுதக் கட்சிகளுக்கும், இந்தியாவிற்கும் இடையில் ஒரு முறுகல் நிலையை தோற்றுவித்தனர்.

அக்காலகட்டத்தில் விடுதலைப் புலிகள் இயக்கமே ஒரு சக்தி வாய்ந்த இயக்கமாக இருந்தது. இதனை **J.R** ஜெயவர்த்தனவும், ரணசிங்க பிரேமதாசவும் ஒரு தந்திரமாக பயன்படுத்திக்கொண்டதுடன், 1987ம் ஆண்டு ஆயுதங்கள் இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்ட போதிலும் தமது தற்பாதுகாப்பை தவிர எந்த வொரு ஆயுதமும் அவர்களிடம் இருக்கவில்லை. அக்காலத்தில் ரணசிங்க பிரேமதாசா தமிழீழ விடுதலைப்புலிகளை கொழும்புக்கு அழைத்து அவர்களுக்கு வாகனம் மற்றும் ஆயுதங்கள் வழங்கி இந்திய இராணுவத்தை இலங்கையிலிருந்து வெளியேற்றுவதற்கு பாரியதொரு தந்திரோபாயத்தைக் கையாண்டார்.

விடுதலைப் புலிகளுக்கும், இந்திய இராணுவத்திற்குமிடையில் போர் ஏற்பட்டது. 1600க்கும் மேற்பட்ட இந்திய இராணுவம் இந்நாட்டில் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். அப்போது தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் மணலாற்று காட்டு பகுதியில் முகாமிட்டிருந்தார். அங்கிருந்து தாக்குதல் வியூகம் வகுக்கப்பட்டு இந்திய இராணுவத்துடன் போராட்டத்தை தொடுத்திருந்தார். அதே நேரம் தியாகி திலீபன் 5 அம்ச கோரிக்கையுடன் உண்ணாவிரதம் இருந்தார். காந்தியத்திற்கு இந்திய அரசு மதிப்பளிப்பதால் அதனை ஏற்றுக்கொண்ட இந்திய இராணுவம் நாட்டை விட்டு வெளியேறிச்சென்றது. இக்கால கட்டத்தில் இராணுவத்திற்கு சார்பாக இருந்த **E.P.R.L.F**, புளொட், ரெலோ மீது தமிழீழ விடுதலைப்புலிகள் தாக்குதலை மேற்கொண்ட பின் 'பழைய குருடி கதவைத் திறவடி' என்பது போல் இலங்கை அரசாங்கம் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிராகப் போராட ஆரம்பித்தது. ராஜீவ் காந்தி தலைமையிலான இந்திய அரசு தமிழருக்கு தமிழீழத்தைப் பெற்றுத்தருவதாகக் கூறியதன் விளைவாக தமிழீழ விடுதலைப்புலிகளால் ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டார். தமிழ் மக்களுக்கு தமிழீழத்தைப் பெற்றுத்தருவதாக கூறிய ரணசிங்க பிரேமதாசா அவர்களும் ஏமாற்றியதன் விளைவாக அவரும் தமிழீழ விடுதலைப்புலிகளின் தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தார். மீண்டும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான போர் இலங்கை அரசால் ஆரம்பிக்கப்பட்டது. அதிதீவிரமாக இலங்கை அரசு பன்னாட்டு உதவிகளுடனும், இந்திய அரசின் உதவியுடனும் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் போரைத் தொடுத்தது. இதன் போது தமது பாதுகாப்பை உறுதிப்படுத்த ரெலோ, புளொட், **E.P.D.P, E.P.R.L.F** போன்ற அமைப்புக்களும் இலங்கை இராணுவத்துடன் இணைந்து தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிராக ஆயுதம் ஏந்தினர். இதன் காரணமாக தமிழீழ விடுதலைப்புலிகள் துரோகிகள் என முத்திரை குத்தப்பட்டு தெருத் தெருவாக சுட்டுக் கொல்லப்பட்டனர். இதனை தமக்குச் சாதகமாக பயன்படுத்திய இலங்கை அரசு ரெலோ, **E.P.R.L.F** தவிர **E.P.D.P,** புளொட் போன்ற கட்சிகளை மாத்திரம் விடுதலைப்புலிகளுடன் யுத்தம் நிறைவு பெறும் வரை தன்னுடன் வைத்திருந்தது.

2001-2004 வரை ஒரு சுமுகமான பேச்சுவார்த்தை சந்திரிக்கா அரசால் மேற்கொண்டதற்கமைய தேர்தல் ஒன்றிற்கு தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப் பாட்டிலுள்ள மக்கள் ஜன நாயக ரீதியில் வாக்களிக்க சந்தர்ப்பம் அமைந்தது. அத்தேர்தலில் தமிழீழ விடுதலைப்புலிகளால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 22 ஆசனங்களுடன் போனஸ் ஆசனங்கள் அடங்கலாக மொத்தம் 25 ஆசனங்களைக் கைப்பற்றினர். அது தமிழீழ விடுதலைப்புலிகள் ஆயுத பலத்துடன் இருந்த காலகட்டம்.

இவ்வாறான நிலையில் தான் தமிழீழ விடுதலைப்புலிகளை பயங்கரவாதிகள் என முத்திரை குத்த வேண்டும் என இந்திய அரசுடன் இணைந்து சர்வதேச நாடுகளும் திட்டம்தீட்டியது. 2004ம் ஆண்டு இடைக்கால நிர்வாகம் தமிழீழ விடுதலைப்புலிகளின் கையில் வழங்கப்பட்டது. இதனையும் குழப்பும் நோக்கில் அரசாங்கம் செயற்பட்டு வந்தது. இதனுடைய பின்னணியில் தான் அமெரிக்கா உள்நுழைகின்றது.

தமிழீழ விடுதலைப்புலிகள் பயங்கரவாதிகள் என அமெரிக்கா, சீனா, இந்தியா போன்ற நாடுகள் இணைந்து முத்திரை குத்தியதுடன், இலங்கை அரசு இந்நாடுகளுடன் நட்புறவும் கொண்டது. அதன் பின்னர் விடுதலைப் புலிகளுடனான போர் மாவிலாறில் ஆரம்பமாகி முள்ளிவாய்க்காலில் இனவழிப்புடன் முடிந்தது.

இலங்கைக்குள் அமெரிக்காவின் செல்லப் பிள்ளையான நோர்வே களமிறக்கப்பட்டதன் விளைவு பிரபா - கருணா பிரிவிற்கு வித்திட்டது. இதில் அமெரிக்க அரசு தனது நலனுக்காக நோர்வே நாட்டை வைத்து சாதித்தும் காட்டியது. கடல், வான், தரை என்று முப்படைகளையும் கொண்டிருந்த விடுதலைப்புலிகளின் இயக்கத்தை ஒரு பயங்கரவாத இயக்கமாக அமெரிக்கா நிறுவியது. பேச்சுவார்த்தைகள் அனைத்தும் தோல்வியில் முடிவடைந்தது. 2003ம் ஆண்டு 9ம் திகதி தொடக்கம் 10ம் திகதி வரை 52 நாடுகள் உட்பட்ட 22 அமைப்புக்கள் விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைக்கு ஆதரவு தெரிவித்தனர்.

திட்டமிட்டே அமெரிக்கா, நோர்வே அரசுடன் இணைந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதானப் பேச்சு வார்த்தையை குழப்பியடித்தது. அமெரிக்காவினுடைய நோக்கம் என்னவெனில் எதிர்காலத்தில் 03 ஆம் உலக மகாயுத்தம் என ஒன்று ஆரம்பிக்கப்படுமாகவிருந்தால் ஆசியப் பிராந்தியத்தில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடமாக கொழும்பு மற்றும் திருகோணமலை துறைமுகத்தை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதுவே. அத்துடன் இலங்கை அரசாங்கத்துடன் ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளதுடன், அமெரிக் காவின் போர் கப்பல்கள் இலங்கை துறைமுகத்திற்கு தங்குதடையின்றி வந்து செல்ல ஏதுவான வழிமுறைகளையும் கூட ஏற்படுத்திக்கொண்டனர். இவ் ஒப்பந்தம் சாத்தியப்படுமானால் மட்டுமே விடுதலைப்புலிகளை அழித்தொழிக்கும் விடயம் சாத்திய மாகும். அதற்கு அமைவாகவே இலங்கை அரசு செயற்பட்டது. இலங்கை அரசின் இந்த நன்றிக் கடனாகவே கடல் பிராந்தியத்தின் வளங்கள் பொறுப்பை அமெரிக்கா ஏற்றுக்கொண்டது.

விடுதலைப் புலிகளுக்கு இந்தோனேசியா, எதியோப்பியா, ரஷ்யா போன்ற நாடுகளில் இருந்து வந்த 8 ஆயுத கப்பல்கள் அமெரிக்க உதவியுடன் காட்டி கொடுக்கப்பட்டது. அதன் பின் அவை மூழ்கடிக்கப்பட்டது. இலங்கையிலிருந்து 250 கடல் மைல் தொலைவில் அமெரிக்காவின் போர் கப்பலான ரொனால்ட் ரீகன் நிறுத்தி வைக்கப்பட்டது.

இதில் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகள் தொடக்கம் அனைத்து வசதிகளும் உள்ளது. இலங்கையின் உள் கட்டமைப்பு வசதிக்காக பாகிஸ்தானால் வழங்கப்பட்ட ஜெட் லைனரும் உள்ளடங்கும். விடுதலைப்புலிகளின் 8 ஆயுதக் கப்பல்களும் அழித்தொழிக்கப்பட்ட காட்சியை அமெரிக்கா ஒளிப்பதிவு செய்து கொண்டது. தமிழ் மக்கள் மீது இனப்படுகொலை மேற்கொள்வதை பார்த்துக்கொண்டிருந்த அமெரிக்கா விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனை சரணடையுமாறு பணித்தது. அதற்கு இணங்க பிரபாகரன் மறுத்தார். 250 கடல்மைல் தொலைவில் நிறுத்திவைக்கப்பட்ட டொனால்ட் ரீகன் கப்பல் தங்களை வந்து காப்பாற்றும். அதற்கு உங்களின் பதில் என்ன? என்று விடுதலைப்புலிகளின் சர்வதேச விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள குமரன் பத்மநாதன் (K.P) அவர்களுடன் தொடர்பு கொண்டு வினவியபோது 'நான் சாகலாம் நாங்கள் சாகக்கூடாது', 'தமிழீழம் என்ற ஒன்று மலரும். அன்று எமது போராளிகளும் மலர்வார்கள்'. 'எமது போராட்டம் துரோகிகளாலும், சர்வதேசத்தாலும் காட்டி கொடுக்கப்பட்டு விட்டது' என்று அந்த உரையாடல் முடிவடைந்தது.

இதில் அமெரிக்கா தனது பங்கை செவ்வனவே செய்து முடித்துள்ளது என்பதுதான் உண்மை. அமெரிக்காவின் தூதரகம் இலங்கையின் தலைநகரில் நிறுவப்பட்டுள்ளது. இங்கிருந்துதான் இலங்கையின் புலனாய்வு விடயங்கள் தொடர்பாகவும், ஏனைய நாடுகளின் ஊடுருவல் தொடர்பாகவும் பதிவுகள் செய்யப்படுகிறது. இலங்கை அரசாங்கம் ஒரு திட்டத்தை மேற்கொள்ள, அத்திட்டத்தை இங்கிருந்து தான் அமெரிக்க அரசு முறியடிக்கின்றது. பூகோள அரசியல் வட்டத்தில் அமெரிக்கா இலங்கையின் ஒரு நிரந்தர குடிமகனாக தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளது. இவர்களுடைய இருப்பை ஏற்றுக்கொள்ள முடியாத சீனாவும், இந்தியாவும் ஏட்டிக்குப் போட்டியாக அரசியலில் காய் நகர்த்தி வருகின்றனர்.

**நெற்றி பொறியன்**

# தமிழ் தேசிய கூட்டமைப்பை பலவீனப்படுத்துகிறது தென்னிலங்கை தேசியவாதம்



தமிழ் தேசிய கூட்டமைப்பானது தமிழ் ஈழ விடுதலை புலிகளினால் உருவாக்கப்பட்ட ஒன்று. அந்த அடையாளத்தை அழித்து விடும் நோக்கிலேயே தென்னிலங்கை பேரினவாத கட்சிகள் செயற்படுகின்றது.

டட்லி சேனநாயக்க தொடங்கி கோட்டபாய வரை ஆட்சி செய்த ஆட்சியாளர்களில் ஒருவரேனும் தமிழ் மக்களுக்கான தீர்வை பெற்று தரும் நோக்கில் செயற்படவில்லை. மாறாக சிங்கள பேரினவாத கொள்கைகளை வகுப்பதில் அவர்கள் குறியாக இருந்தனர். சிங்கள பேரினவாத அரசியலமைப்பும் சிறுபான்மை இனத்துக்கு நன்மை பயக்கும் வகையில் எழுதப்படவில்லை.

தமிழ் இன விடிவிற்காய் ஆயுதம் ஏந்தி போராடிய தமிழீழ விடுதலைப் புலிகள் இவ் விடுதலை போராட்டத்தை தொடர்ந்து அரசியல் ரீதியாக எடுத்துச் செல்லும் நோக்கில் தமிழீழ விடுதலை புலிகள் தமக்கான அரசியல் கட்டமைப்பை சர்வதேசம் ஏற்கும் வகையில் புத்திஜீவிகளை உள்ளடக்கி தேசியத் தலைவர் பிரபாகரன் மற்றும் ஊடகவியலாளரும். ஆய்வாளருமாகிய டி.சிவராம் இணைந்து உருவாக்கினர்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணி. ரெலோ. தமிழ் அரசுக்கட்சி. **EPRLF** போன்ற கட்சிகள் இக் கூட்டமைப்பில் ஒன்று சேர்க்கப்பட்டது. அக்காலத்தில் புளொட் இணைக்கப்படவில்லை. பிற்பாலத்தில் புளொட் கட்சி இணைக்கப்பட்டது. தமிழீழ விடுதலை புலிகள் இருந்த காலத்தில் போனஸ் ஆசனத்துடன் 25 ஆசனங்களை பாராளுமன்றில் தமிழ் தேசிய கூட்டமைப்பு கைப்பற்றி இருந்தது. இதன் பிரகாரம் தமிழ் தேசிய கூட்டமைப்பு ஒரு வலுவான கட்சியாகத் திகழ்ந்தது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் காலத்தில் கூட தமிழ் தேசிய கூட்டமைப்பை உடைக்க முடியாத சூழல் இருந்தது. யுத்தத்தின் பின்னர்தமிழ்தேசியமக்கள்முன்னணி தமிழ் தேசிய கூட்டமைப்பு கொள்கை அடிப்படையில் தவறிழைக்கிறது எனக் கூறி வெளியேறியது. இது 1வது கட்சி உடைப்பாகும்.

2வது உடைப்பானது. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச காலத்தில் இடம்பெற்ற மாகாண சபைத் தேர்தலில் **EPRLF** கட்சி தனியாகப் போட்டியிட்டது. ஆனால் அவர்களால் வடக்கிலும் கிழக்கிலும் கணிசமான வெற்றியைக் கூடப் பெற முடியவில்லை.

கடந்த பாராளுமன்ற தேர்தலின் போது யாழ்ப்பாணத்தைப் பிரதிபலிக்கும் சுரேஸ் பிரேமச்சந்திரன் அவர்கள் தோல்வியைத் தழுவிக் கொண்டார்.

ஆகவே சுரேஸ் பிரேமச்சந்திரன் அவர்களுக்கு தேசிய பட்டியலில் இடம் கொடுக்குமாறு ஏனைய கட்சிகளால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

ஆனால் பெண்களின் பிரதிநிதித்துவம் இருக்கவேண்டும் என்பதற்காக தேசிய பட்டியலின் மூலம் சாந்தி ஸ்ரீஸ்காந்தராஜா அவர்கள் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். இந்நிலையில் தமிழ் தேசிய கூட்டமைப்புக்கும் **EPRLF**க்கும் இடையில் முறுகல் நிலை அதிகரித்தது. **EPLRF** தமிழ் தேசிய கூட்டமைப்பை அழிக்கும் நோக்குடன் பல யுக்திகளை கையாண்டது. தமிழ் அரசியல் தலைமைகள் ஒன்றிணைந்தால் மட்டுமே தமிழ் மக்களுக்கான தீர்வினை பெற்றுக் கொள்ள முடியும் என்பதே யதார்த்தமான உண்மை.

இந்த விடயத்தை தமிழ் அரசுக் கட்சியும். தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் அவர்கள் கருத்தில் கொள்ளவேண்டும்.

ஆயுதக்கட்சிகளைப் புறந்தள்ளும் செயற்பாடுகளை ஏற்றுக் கொள்ள முடியாது. ஆயுத கட்சிகள் தான் தமிழ் அரசுச் கட்சியின் வளர்ச்சிக்கு வித்திட்டுள்ளது.

அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்ட கால கட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் போர் உச்சம் அடைந்தது. சிங்கள பேரினவாதத்தின் உச்சக்கட்ட அடிமைத்தனத்தின் வடிவமே தமிழ் இளைஞர்கள் ஆயுதமேந்தக் காரணம்.

தமிழ் அரசியல் கட்சிகளால் தமிழினத்திற்கானத் முழுமையானத் தீர்வுகள் இதுவரை பெற்றுக்கொடுக்கப்படவில்லை. மாறாக தமக்குள் பிளவுகளை ஏற்படுத்திக்கொண்டு புதிய புதிய கட்சிகளைத் தான் ஆரம்பித்துக்கொண்டிருக்கின்றனர். கடந்த கால சிங்கள பேரினவாத தலைமைகள் தமிழரை எப்படியெல்லாம் அடிமைப்படுத்தினர் என்பதற்கு பல சான்றுகள் உள்ளன. சிங்கள பேரினவாத தலைமைகளுடன் ஒத்துபோனால் மட்டுமே தமிழருக்கு தீர்வு என்று ஒரு சிலர் நினைப்பது தவறானது. தீர்க்கப்படாத பிரச்சினைகள் எவ்வளவோ உண்டு. அவற்றைத் தீர்க்கும் அளவிற்கு அரசாங்கத்தோடு சம அளவில் நிற்கும் தகுதி எமக்கு வேண்டும். ஆகவே சம பலம் என்பது அஹிம்சை ரீதியாகவும். ஆயுதம் ரீதியாகவும் தான் பெறமுடியும்.

இதில் தற்போது ஆயுத ரீதியான போராட்டங்கள் முடக்கப்பட்டுள்ள நிலையில் நாம் அஹிம்சை ரீதியானப் போராட்டங்களை தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படுத்துவதன் ஊடாக வெற்றி பெற முடியும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அரசிற்கு எதிராக தேசியம். சுயநிர்ணய உரிமை கோரி போராட்டம் செய்து கொண்டு இருக்கும் போது முஸ்லீம்கள். புளொட். **EPDP,EPRLF** போன்ற ஒட்டுக்குழுக்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து இப் போராட்டத்தை காட்டிக் கொடுத்தனர். ஆனால் இன்று தமிழ் மக்கள் முன் வந்து முதலைக் கண்ணீர் வடிக்கின்றனர்.

ஆகவே இது சமாதான காலம் என நினைத்து விடாது தமிழ் மக்களுக்கான உரிமைகளை வென்றெடுக்கும் நோக்கில் அரசாங்கத்துடன் நேரடியாகவும் மறைமுகமாகவும் இணைந்து செயற்பட்டுக்கொண்டிருக்கும் ஒட்டுக்குழுக்கள் யாவும் பகைமை மறந்து தமிழ் இனத்துக்காக போராட முன் வரவேண்டும்.

**(இரணியன்)**

# புதிய அரசியல் அமைப்பு சிங்களவர்களுக்கே சாதகமானது

புதிய அரசியல் அமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டும் என்ற பேச்சுகள் 2015, ஜனவரி 08 இல் மைத்திரி – ரணிலின் நல்லாட்சி அரசில் பேசப்பட்டாலும் அது சாத்தியமாகவில்லை. எனினும் தற்போதைய கோட்டபாய அரசில் புதிய அரசியலமைப்பு என்கிற பேச்சுக்கே இடமில்லை என்கிற நிலையில், புதிய அரசியல் அமைப்பு என்ன தேவைக்காகக் கொண்டுவரப்படவேண்டும் என்றோ அல்லது அது எப்படியானதாக அமையவேண்டும் என்றோ, ஆட்சியாளர்களும் சரி, எதிர்க்கட்சிகளும் சரி தெளிவுபடுத்தாத ஒரு அரசியல் சூழ்நிலை தான் இருந்து வருகிறது. இலங்கையின் புதிய அரசியல் அமைப்பு என்பது 'யானை பார்த்த குருடர்கள்' நிலை தான்.

சுதந்திர இலங்கைக்கு என இதுவரை மூன்று அரசியல் அமைப்புகள் வரையப்பட்டுள்ளன. முதலாவது அரசியல் அமைப்பு இலங்கை 1948இல் பிரித்தானியரிடமிருந்து சுதந்திரம் பெற்ற பொழுது, பிரித்தானியரால் வரையப்பட்டு கையளிக்கப்பட்ட 'வெஸ்ற் மினிஸ்ரர்' முறையிலான சோல்பரி அரசியல் அமைப்பு.

அரசியல் அமைப்பு பிரித்தானிய காலனித்துவவாதிகளின் நலன்களைப் பாதுகாப்பதற்காக வரையப்பட்டது, இலங்கையின் தேசியநலன்களுக்கு எதிரானது' என்று சொல்லி, 1970இல் பதவிக்கு வந்த திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான சிறீலங்கா சுதந்திரக் கட்சி, இலங்கைகம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சிகளைக் கொண்ட கூட்டரசாங்கம், 1972இல் புதிய குடியரசு அரசியல் யாப்பொன்றை அறிமுகம் செய்தது.

இந்த அரசியல் அமைப்பில் பல நல்லவிடயங்கள் இருந்தபோதிலும், சோல்பரி அரசியல் அமைப்பில் சிறுபான்மை இனங்களுக்குப் பாதுகாப்பாக இருந்த 28ஆவது சரத்து நீக்கப்பட்டுள்ளது என்று சொல்லியே தமிழரசுக் கட்சி இதற்கு எதிராகச் சட்டவிரோதப் போராட்டங்களை ஆரம்பித்து பின்னர் அது தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டமாவதற்கு வழிவகுத்தது. ஆனால், சோல்பரி அரசியல் சட்டத்தாலும் தமிழர்களின் பிரச்சினை தீர்க்கப்படவில்லை என்பதையோ, அது அமுலில் இருந்த காலத்தில தான் தமிழரசுக் கட்சி சமஸ்டிக் கோரிக்கையை முன்வைத்தது என்பதையோ, தமிழ் தலைமைகள் ஒரு போதும் பேசுவதில்லை.

இதன் பின்னர், 1977இல் பதவிக்கு வந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம், குடியரசு அரசியல் யாப்பை நீக்கிவிட்டு 1978இல் மீண்டுமொரு புதிய அரசியல் யாப்பை அறிமுகம் செய்தது. இந்த அரசியல் யாப்பு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை அறிமுகம் செய்து தனிமனித சர்வாதிகாரத்துக்கு வழிவகுத்ததுடன், பாராளுமன்ற ஜனநாயகத்தையும் குழிதோண்டிப் புதைத்தது. மிகக் கடுமையான ஒற்றையாட்சி முறையைக் கொண்ட இந்த அரசியல் அமைப்பால்தான் இனப் பிரச்சினை யுத்தமாக வடிவெடுத்தது. இந்த நிமிடம் வரை இந்த அரசியல் அமைப்புத்தான் நடைமுறையில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தச் சூழ்நிலையில் தான் கடந்த நல்லாட்சி அரசில் புதிய அரசியல் அமைப்பு வரைவதைப் பற்றிப் பேசப்பட்டது. புதிய அரசியல் அமைப்பின் நோக்கம் நல்லாட்சி அரசைப் பதவிக்குக் கொண்டு வந்த மேற்கத்தைய சார்புச் சக்திகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வது தான் என்ற விமர்சனம் அப்போது எழுந்திருந்த நிலையில், புதிய அரசியல் அமைப்பு என்ன உள்ளடக்கத்தைக் கொண்டு அமையப்போகிறது, இப்புதிய அரசியல் அமைப்பினால் சிறுபான்மை சமூகத்திற்கு என்ன பயன் என்கிற கேள்விகளும் எழுந்தன.

ஏற்கெனவே நடைமுறையில் உள்ள அரசியல் அமைப்பு சர்வாதிகாரத்தனமாக இருப்பதுடன், இனப் பிரச்சினையையும் சிக்கல்படுத்தி இருப்பதனால், நல்லாட்சியின் புதிய அரசியல் அமைப்பு என்கிற வேடம் இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுமா என்ற அவா மக்கள் மத்தியில் எழுந்தது.

எனவே, புதிய அரசியல் அமைப்பு, பூரணமான ஜனநாயக அரசியல் சூழலை புதிய அரசியல் அமைப்பு உருவாக்க வேண்டும். ஜனநாயகச் சூழல் எனும் போது, அரசியல் உரிமைகள், சம வாய்ப்பு, தனிமனித சுதந்திரம், சமூகப் பாதுகாப்பு, ஊடக சுதந்திரம், மனித உரிமைகள் பேணுதல், சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல் எனப் பலவகைப்பட்டதாகும். இரண்டாவது, முன்னைய மூன்று அரசியல் அமைப்புகளாலும் தீர்க்கப்படாமல் புரையோடிப் போயிருக்கும் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்கிற ரீதியில் அமைய வேண்டும்.

ஆனால், 'யானை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே' என்பதைப் போல, நல்லாட்சி அரசாங்கத்தின் நடவடிக்கைகள் புதிய அரசியல் அமைப்பின் வெள்ளோட்டமாக அமைந்திருந்தது.

இனப் பிரச்சினையைப் பொறுத்தவரையிலும், அரசாங்கத்தினால் குட்டையைக் குழப்பி வருகின்ற நிலை தான் தொடர்கின்றது. இலங்கையை இரண்டாகப் பிரித்து, வடக்கு கிழக்குப் பகுதிக்கு சமஸ்டி வழங்க வேண்டும் என தமிழ் தேசியக் கூட்டமைப்பால் நிர்வகிக்கப்படும் வட மாகாண சபை தீர்மானம்



நிறைவேற்றியது. அந்தத் தீர்மானத்தின் உள்ளடக்கத்தை அரசாங்கத்தை ஆதரித்துக் கொண்டு, எதிர்க்கட்சியாகவும் இருந்த கூட்டமைப்புத் தலைமையும் அப்போது ஆதரித்தது. சமஸ்டி என்ற சொல்லால் கடந்த காலத்தில் இலங்கையில் எழுந்த பாரதூரமான அரசியல் கொந்தளிப்பு நிலைமையை அறிந்திருந்தும், மீண்டுமொரு திட்டமிட்ட குழப்ப விளையாட்டில் தமிழ் தலைமை ஈடுபட்டது.

இப்படிச் சமஸ்டி கோருபவர்கள், 2000ஆம் ஆண்டில் சந்திரிக்கா குமாரதுங்க தலைமையிலான அப்போதைய அரசாங்கம் கொண்டு வந்த, ஏறக்குறைய சமஸ்டிக்கு ஒப்பான, வடக்கு கிழக்கில் உள்ள தமிழ் பேசும் பிரதேசங்களை உள்ளடக்கிய 'பிராந்தியங்களின் ஒன்றியம்' என்ற நல்லதொரு திட்டத்தை ஐ.தே.கவுடனும், ஏனைய சிங்கள இனவாதக் கட்சிகளுடனும் சேர்ந்து நிறைவேற்றவிடாது முறியடித்தது எதற்காக என்பதற்கு விளக்கம் சொல்ல வேண்டும்.

கடந்த நல்லாட்சியில் பிரதமராகவிருந்த ரணில் விக்கிரமசிங்க மிகவும் தெட்டத்தெளிவாக, "சமஸ்டி என்ற பேச்சுக்கே இடமில்லை" என ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் வலியுறுத்திக் கூறினார். அதே போல, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இராணுவ வைபவம் ஒன்றில், "இலங்கையில் ஒற்றையாட்சி முறை இருப்பதே, நாட்டின் ஐக்கியத்துக்கும் ஒருமைப்பாட்டுக்கும் அவசியமானது" எனக் குறிப்பிட்டார். மறுபக்கத்தில், தென்னிலங்கையிலுள்ள ஏனைய அரசியல் கட்சிகளைப் பொறுத்தவரையில் கூட, இனப் பிரச்சினைக்குத் தீர்வாக ஒற்றையாட்சியை நீக்கிய அதிகாரப் பகிர்வுக்கு ஏனைய கட்சிகள் ஆதரவளிக்கத் தயார் இல்லை.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சம்பந்தன் – சுமந்திரன் அணியினர் கடந்த அரசாங்க காலத்தில், இனப் பிரச்சினைக்கு நியாயமான தொரு தீர்வு காணப்படும் எனத் திரும்பத் திரும்பக் கூறி வந்தனர். என்ன முகாந்திரத்தை வைத்து இவர்கள் இப்படிக் கூறினர் என்பது 'ஆண்டவனுக்குக் கூட' தெரியுமோ என்னவோ? இப்பொழுது அனைத்தும் தலை கீழாக மாறியிருக்கிறது. தற்போதைய ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ அவர்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் பேச்சுவார்த்தை நடத்தக்கூட முடியாத அளவிற்கு நிலைமைகள் மோசமடைந்துள்ளன. இலங்கையினது அரசியல் தற்போது தமிழ் மக்களுக்குச் சாதகமானதாக இல்லை. தமிழ் மக்களது பிரச்சினைகள் குறித்துப் பேசுவதற்குக் கூட ஆட்சியாளர்கள் தயாராக இல்லை.


எனவே, நாட்டின் அரசியல், பொருளாதார, நிர்வாக, நிதிக் கட்டமைப்பு முறைமையை அந்நிய மற்றும் பிராந்திய வல்லாதிக்க சக்திகளின் நலன்களைப் பாதுகாக்கும் நோக்கில் தான் தற்போதைய அரசும் செயற்பட்டு வருகிறது. வடகிழக்கில் இராணுவப் பிரசன்னம் அதிகரித்திருக்கிறது. நாட்டின் அனைத்துத் துறைகளிலும் இராணுவத்தினர் உயர் பதவிகளில் நியமிக்கப்பட்டுள்ளனர். நாட்டில் சீனாவினது ஆதிக்கம் அதிகரித்துள்ளது. கொரோனா வினைக் காரணங்காட்டி அத்தியாவசியப் பொருட்கள் அனைத்தும் விலையேற்றம் கண்டுள்ளன. இவ்வரசால் மக்கள் சலிப்படைந்து போயுள்ளனர். பௌத்த தேரர்களே இவ்வாட்சிக்கு எதிராக இன்று குரல்கொடுக்கின்றனர்.

தமிழ் மக்கள் தேவைக்கு அதிகமாக மாயை கொள்வது நமக்கு நாமே குழிதோண்டிக் கொள்வதாகத்தான் முடியும். முதலில் செய்ய வேண்டியது, நாட்டில் உண்மையான மக்கள் நலன் காக்கும் அரசொன்றைப் பதவிக்குக் கொண்டு வருவதே. அதன் பின்னர் நாட்டு மக்கள் அனை வரதும் ஆலோசனைகளுடன் புதிய அரசியல் அமைப்பொன்றை வரைவதே சாலப் பொருத்தமாக இருக்கும். எங்களுக்குத் தேவை முற்றுமுழுதான ஜனநாயக ரீதியிலான புதிய அரசியலமைப்பே தவிர, புதிய வடிவத்தில் இன்னொரு 1978இன் அரசியல் அமைப்பல்ல. இதில் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும்.

**இரணியன்**



# பிராந்தியச் செய்திகள்



## கர்ப்பிணி பெண் உள்ளிட்ட 29 பேருக்கு வவுனியாவில் கொவிட் தொற்று உறுதி

வவுனியாவில் கர்ப்பிணி பெண் உள்ளிட்ட 29 பேருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொவிட் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்கள், வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டவர்கள் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பிசீஆர் பரிசோதனையின் முடிவுகள் அன்று இரவு (02.07) வெளியாகின.

அதில், ஓமந்தை அரசன்குளம் பகுதியில் ஒருவருக்கும், நெடுங்கேணி பகுதியில் ஒருவருக்கும், குருமன்காடு பகுதியில் ஒரு கர்ப்பவதி பெண் உட்பட ஒரே வீட்டில் ஐந்து பேருக்கும், பனிக்கர்மகிழங்குளம் பகுதியில் ஒருவருக்கும், சாந்தசோலை பகுதியில் ஒருவருக்கும்,

கூமாங்குளம் பகுதியில் இருவருக்கும், மன்னகுளம் பகுதியில் ஒருவருக்கும், வேப்பங்குளம் பகுதியில் ஒருவருக்கும், மதவாச்சி பகுதியில் ஒருவருக்கும், குட்செட் வீதி பகுதியில் இருவருக்கும், கோதாண்டார்நொச்சிக்குளம் பகுதியில் ஒருவருக்கும்,

சமயபுரம் பகுதியில் ஒருவருக்கும், உக்குளாங்குளம் பகுதியில் ஒருவருக்கும், திருநாவற்குளம் பகுதியில் ஒருவருக்கும், பட்டானிச்சூர் பகுதியில் ஒருவருக்கும், உளுக்கொட்டேன பகுதியில் ஒருவருக்கும், வைரவபுளியங்குளம் பகுதியில் ஒருவருக்கும், ஆச்சிபுரம் பகுதியில் ஒருவருக்கும், பண்டாரிக்குளம் பகுதியில் ஒருவருக்கும், புகையிரத நிலைய விடுதியில் ஒருவருக்கும் என 29 பேருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

## நயினை நாகபூசணி அம்மன் ஆலயத்திற்கு வருவதை தவிருங்கள் பக்தர்கள் கவலை

நயினை நாகபூசணி அம்மன் ஆலயத்திற்கு வருவதை தவிர்க்குமாறு பக்கதர்களிடம் ஆலய அறங்காவலர் சபை கோரிக்கை விடுத்துள்ள நிலையில் நயினை அம்பாள் பக்தர்களுக்கு அது கவலையினை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பில் ஆலய அறங்காவலர் சபை விடுத்துள்ள அறிவித்தலில், சுகாதார துறையினரின் அறிவுறுத்தலுக்கு அமைவாக மட்டுப்படுத்தப்பட்ட அடியவர்களுடன் மட்டுமே நித்திய பூஜைகள் இடம்பெறுகின்றன.

இந்நிலையில் அடியவர்களின் நேர்த்திகள், அபிசேகங்கள் என்பன தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. அவை மீள ஆரம்பிக்கும் போது அடியவர்களுக்கு அது தொடர்பில் அறிவிக்கப்படும்.

எனவே நாட்டின் தற்போதைய நிலைமைகளை கருத்தில் கொண்டு ஆலயத்திற்கு வருகை தருவதனை தவிர்த்து வீடுகளில் இருந்தவாறு அம்பாளை வேண்டிக்கொள்ளுங்கள் என அவர்கள் கூறியுள்ளனர்.

## கோதுமை மா விலையை அதிகரிக்க அனுமதி இல்லை: லசந்த அழகியவன்ன

கோதுமை மா விலையை அதிகரிக்க அனுமதி வழங்கப்பட மாட்டாது என சந்தைப்படுத்தல் கூட்டுறவு சேவைகள், சந்தை அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்துடன் அன்று (01) நடைபெற்ற கலந்துரையாடலின் போது, இது குறித்து தெளிவுபடுத்தியதாக இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதனடிப்படையில், பாணின் விலையை அதிகரிக்காதிருப்பதற்கு அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, கோதுமை மா விலையை அதிகரிப்பதற்கு செரண்டிப் நிறுவனத்திற்கு அனுமதி வழங்கவில்லை என நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

குறித்த நிறுவனம், ஒரு கிலோகிராம் கோதுமை மாவின் விலையை 18 ரூபாவால் அதிகரித்து விற்பனை செய்வது நியாயமற்றது எனவும் சபையின் தலைவர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் ஷாந்த திசாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

நிர்ணய விலைக்கமைய, ஒரு கிலோ கிராம் கோதுமை மாவை 87 ரூபாவிற்கே விற்பனை செய்ய முடியும். எனினும், செரண்டிப் நிறுவனம் ஒரு கிலோ கிராம் கோதுமை மாவை 107 ரூபாவிற்கு விற்பனை செய்வதாக நுகர்வோர் விவகார அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

வெள்ளவத்தையில் அமைந்துள்ள செரண்டிப் நிறுவனத்தின் விநியோக நிலையமொன்று, நுகர்வோர் விவகார அதிகார சபையினால் சுற்றிவளைக்கப்பட்டுள்ளது.

குறித்த நிலையம், ஒரு கிலோகிராம் கோதுமை மாவின் விலையை 18 ரூபாவால் அதிகரித்து விற்பனை செய்துள்ளமை தெரியவந்துள்ளதாகவும் சபை குறிப்பிட்டுள்ளது.

இதற்கமைய, குறித்த விநியோக நிலையத்திற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கு நுகர்வோர் விவகார அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

## பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் திருகோணமலையில் 24 வயது இளைஞர் கைது

திருகோணமலையில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் இளைஞரொருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக எமது பிராந்திய செய்தியாளர் தெரிவித்தார்.

சுமார் 24 வயது மதிக்கத்தக்க இளைஞரொருவரே கைது செய்யப்பட்டுள்ளதாக திருகோணமலை பொலிஸார் தெரிவித்துள்ளதாக கூறப்படுகிறது.

2018ஆம் ஆண்டு முகநூலில் பதிவு செய்யப்பட்ட விடுதலைப் புலிகளின் தலைவரின் புகைப்படம் ஒன்று நினைவூட்டலாக வந்ததை மீண்டும் பகிர்ந்தமை தொடர்பாகவும், சில நாட்களுக்கு முன்பு இன்னுமொரு புகைப்படம் பதிவேற்றம் செய்யப்பட்ட சந்தேகத்தின் அடிப்படையிலும் அவர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தனது படிப்பை முடித்துவிட்டு தொழில் வாய்ப்புக்காக காத்திருந்த இளைஞரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட இளைஞர் கிண்ணியா நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வவுனியா நகர சதோச கிளை மூடப்பட்டது

கொவிட் பரவலையடுத்து வவுனியா நகர சதோச கிளை மூடப்பட்டது.

வவுனியா நகரில் மேற்கொள்ளப்பட்ட பி.சீ.ஆர் பரிசோதனையில் முடிவுகள் சில வெளியாகிய நிலையில், வவுனியா நகர சதோச கிளையில் பணியாற்றும் ஊழியர் ஒருவருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த ஊழியரை கோவிட் சிகிச்சை நிலையத்திற்கு அனுப்பி வைக்க சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளதுடன், அவருடன் தொடர்பைப் பேணிய குறித்த சதோச கிளை ஊழியர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன், சதோச கிளையும் சுகாதாரப் பிரிவினரால் மூடப்பட்டுள்ளது.

## யாழில் இரு நகைக்கடைகள் தனிமைப்படுத்தப்பட்டன

யாழ்ப்பாணம் மாநகரில் இரண்டு நகைக் கடைகள் சுகாதாரத் துறையினரால் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதியில் உள்ள இரண்டு நகைக் கடைகளே மறு அறிவித்தல் வரை தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இரண்டு நகைக் கடைகளிலும் பணியாற்றுபவர்களுக்கு கொவிட்-19 நோய்த்தொற்று உள்ளமை கண்டறியப்பட்ட நிலையில் யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரியின் அறிவுறுத்தலில் இவை தனிமைப்படுத்தப்பட்டன.

## பாடசாலைகளை ஜீலை மாதத்தில் ஆரம்பிப்பதற்கு கல்வி அமைச்சு தீர்மானம்!

மாணவர்களின் எண்ணிக்கை 100 ஐ விடக் குறைந்த பாடசாலைகளை ஜீலை மாதத்தில் ஆரம்பிப்பதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இது ஆரம்ப கட்டம் எனவும், சுகாதார பிரிவின் பூரண வழிகாட்டல்களைப் பின்பற்றி பாடசாலைகள் ஆரம்பிக்கப்படும் எனவும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

பாடசாலைகளை ஆரம்பித்த பின் வருகை தரும் ஆசிரியர்களுக்கு தடுப்பூசி கட்டாயமானது எனவும் கல்வி அமைச்சர் ஜனாதிபதியுடன் நடைபெற்ற கூட்டத்தில் வலியுறுத்தியுள்ளார்.

மாணவர்கள் எண்ணிக்கை 50 ஐ விடக் குறைந்த சுமார் ஆயிரத்து 439 பாடசாலைகள் மற்றும் 51-100 வரையான எண்ணிக்கையைக் கொண்ட ஆயிரத்து 523 பாடசாலைகளுமாக 2 ஆயிரத்து 962 பாடசாலைகளை முதல் கட்டமாக ஜீலை மாதத்தில் ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.






## ரோஜா சீரியலில் புதிதாக நடிக்கவரும் நடிகை

சன் டிவி சீரியல்களில் இதுவரை கண்டிராத உச்சத்தை ரோஜா சீரியல் TRPயில் தொட்டது.

அதுமட்டமின்றி தமிழ் சின்னத்திரையில் ஒளிபரப்பாகி வரும் சீரியல்களில் தற்போது முதலிடத்தில் ரோஜா உள்ளது.

சமீபத்தில் ரோஜா சீரியலில் வில்லி கதாபாத்திரத்தில் நடித்து வந்த நடிகை ஷாமிலி, பிரசவத்தின் காரணமாக சீரியலை விட்டு விலகியுள்ளார்.

இதனால் அவர் சிறப்பாக நடித்து வந்த ப்ரியா எனும் வில்லி கதாபாத்திரத்தில் யார் நடிக்க போகிறார் என்ற கேள்வி எழுந்தது.

இந்நிலையில் இந்த வில்லி கதாபாத்திரத்தில் சன் டிவி தொகுப்பாளினி அக்ஷயா நடிக்கவிருக்கிறார் என்று தெரியவந்துள்ளது.

அதுவும் ஜெயிலில் சிறைப்பட்டு இருக்கும் அனு தப்பிவிடுவதாகவும், அவருக்கு பதில் பொய்யான அனு இருப்பதாகவும் சமீபத்திய ப்ரோமோவில் காட்டியிருந்தார்.

இதனால் பொய்யான அனு கதாபாத்திரத்தில் தான் தொகுப்பாளினி அக்ஷயா நடிக்க வந்துள்ளார் என்றும் தெரிவிக்கின்றனர்.



## இன்ஸ்டாகிராம் மூலமாக அதிக பணம் சம்பாதிக்கும் பட்டியலில் பிரியங்கா சோப்ரா

பிரபல சமூக வலைத்தளமான இன்ஸ்டாகிராம் மூலமாக அதிகம் பணம் சம்பாதிக்கும் பட்டியலில் கால்பந்து வீரர் ரொனால்டோ தான் முதல் இடத்தில் உள்ளார்.

இன்ஸ்டாகிராமில் ரொனால்டோ வெளியிடும் ஸ்பான்ஸர் பதிவு ஒன்றுக்கு ரூ. 11.9 கோடி வருமானம் கிடைக்கும். அவரை தொடர்ந்து டுவைன் ஜான்சன், லியோனல் மெஸ்ஸி உள்ளிட்ட உலக பிரபலங்கள் உள்ளனர்.

மேலும் இந்த பட்டியலில் இந்திய கிரிக்கெட் அணியின் கேப்டன் விராட் கோலி 19 வது இடத்திலும், நடிகை பிரியங்கா சோப்ரா 27 வது இடத்திலும் உள்ளார்கள்.

நடிகை பிரியங்கா சோப்ரா இன்ஸ்டாகிராமில் பகிர்ந்து கொள்ளும் ஒவ்வொரு ஸ்பான்ஸர் பதிவுக்கும் ரூ .3 கோடி வருமானம் கிடைக்கும்.



## மீண்டும் இயக்குனராக களமிறங்கும் கங்கனா ரனாவத்

பாலிவுட்டில் முன்னணி நடிகையாக வலம்வரும் கங்கனா ரனாவத், ஏற்கனவே 'மணிகர்னிகா' என்ற இந்தி படத்தை இயக்கி உள்ளார்.



மறைந்த முதல்-அமைச்சர் ஜெயலலிதா வாழ்க்கை வரலாறு, விஜய் இயக்கத்தில், 'தலைவி' என்ற பெயரில் படமாகி இருக்கிறது. அதில் ஜெயலலிதா வேடத்தில் பிரபல இந்தி நடிகை கங்கனா ரனாவத் நடித்து இருக்கிறார். இந்த படம் விரைவில் வெளிவர இருக்கிறது. இதையடுத்து, முன்னாள் பிரதமர் இந்திராகாந்தி வாழ்க்கை வரலாற்று படத்தில் கங்கனா ரனாவத் நடிக்கிறார். இந்த படத்துக்கு, 'எமர்ஜென்சி' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இந்திராகாந்தி பிரதமராக இருந்த போது நெருக்கடி நிலையை பிரகடனம் செய்தார். அதை சுட்டிக்காட்டும் விதத்தில், படத்துக்கு 'எமர்ஜென்சி' என்று பெயரிடப்பட்டு இருக்கிறது. இந்திராகாந்தி வேடத்தில் கங்கனா ரணாவத் நடிப்பதுடன், இப்படத்தை இயக்கவும் உள்ளார். இவர் ஏற்கனவே 'மணிகர்னிகா' என்ற இந்தி படத்தை இயக்கி இருக்கிறார். அவர் இயக்கும் இரண்டாவது படம், இது என்பது குறிப்பிடத்தக்கது.

## நயன்தாராவுடன் சேர்ந்து நடிப்பது குறித்து முதல்முறையாக பதிலளித்த சமந்தா!



நடிகை சமந்தா தமிழ் மற்றும் தெலுங்கு திரையுலகில் முன்னணி நடிகையாக விளங்குபவர். இவருக்கென்று ஒரு பெரிய ரசிகர்கள் வட்டமே உள்ளது.

இந்நிலையில் இவர் நடிப்பில் அடுத்ததாக வெளியாகவுள்ள திரைப்படம் தான் காத்து வாக்குல ரெண்டு காதல்.

இப்படத்தில் அவருடன் விஜய் சேதுபதி மற்றும் நயன்தாரா நடிக்கின்றனர். சமீபத்தில் சமந்தா அளித்துள்ள பேட்டியில் அவர்களுடன் நடித்தது குறித்து பேசியுள்ளார்.

அதில் நயன்தாரா மற்றும் விஜய் சேதுபதி இருவரும் இப்படத்தில் அற்புதமாக நடித்துள்ளனர், நயன்தாரா மற்றும் சேதுபதியுடன் ஒரு நல்ல உறவைப் பகிர்ந்து கொள்வதாகவும் அவர் கூறியுள்ளார்.

## திருமணத்துக்கு முன்பே கர்ப்பமான ஸ்லம்டாக் மில்லியனர் பட நடிகை

மும்பையை சேர்ந்தவரான நடிகை ஃபிரீடா பின்டோ, தற்போது ஹாலிவுட் படங்கள் மற்றும் தொலைக்காட்சி தொடர்களில் நடித்து வருகிறார்.



ஏ.ஆர்.ரகுமானுக்கு 2 ஆஸ்கர் விருதுகளை பெற்றுத் தந்த ஸ்லம்டாக் மில்லியனர் படம் மூலம், நடிகையாகி பிரபலமானவர் ஃபிரீடா பின்டோ. மும்பையை சேர்ந்த இவர் தொடர்ந்து ஹாலிவுட் படங்கள் மற்றும் தொலைக்காட்சி தொடர்களில் நடித்து வருகிறார்.

நடிகை ஃபிரீடா பின்டோ, புகைப்படக் கலைஞர் கோரி ட்ரான் என்பவரை காதலித்து வருகிறார். கடந்த 2019-ம் ஆண்டு நவம்பர் மாதம், இவர்கள் இருவருக்கும் நிச்சயதார்த்தம் நடந்தது.

ஆனால் அவர்கள் இருவரும் இதுவரை திருமணம் செய்து கொள்ளவில்லை.

இந்நிலையில், தனது காதலர் கோரியின் பிறந்தநாள் அன்று இன்ப அதிர்ச்சி கொடுத்திருக்கிறார் நடிகை ஃபிரீடா. தனக்கு விரைவில் குழந்தை பிறக்கவிருப்பதாக குறிப்பிட்டு, புகைப்படம் ஒன்றையும் தனது சமூக வலைதள பக்கத்தில் பதிவிட்டுள்ளார் ஃபிரீடா. இதைப் பார்த்த ரசிகர்கள், திருமணத்துக்கு முன்பே கர்ப்பமா? என்று கேள்வி எழுப்பி வருகின்றனர்.

தொகுப்பு :– ஹாசினி




## அழகு பராமரிப்பில் அரிசி மாவு எவ்வாறு பயன் தருகிறது தெரியுமா...?

அரிசியை மாவாக்கி நமது முகம் மற்றும் சரும பொலிவிற்கு பயன்படுத்தலாம். அதிக செலவின்றி சுலபமாய் கிடைக்கும் அரிசி மாவில் இளமையை தக்க வைக்க உதவும்.

அரிசியில் உள்ள உயர்வான விட்டமின் டி சத்து வாயிலாக புதிய செல் உருவாக்கம் நடைபெற்றது. அதனால் வயோதிக தோற்றம் ஏற்படுவது தடுக்கப்படுகிறது. அரிசி மாவின் மூலம் சருமம் வழுவழுப்புடன், பிரகாசமாக பொலிவுடன் இருப்பது உறுதி செய்யப்படுகிறது.

அரிசி மாவுடன் சர்க்கரை சேர்த்து உருட்டி முகத்தில் இலேசாக மசாஜ் செய்யவும். முகத்தில் இருக்கும் கரும்புள்ளிகள் மூக்கு நுனிகள் கழுத்தில் இருக்கும் கருமைகள் போன்ற இடங்களில் சற்று அழுத்தமாக ஸ்கரப் செய்து பிறகு குளிர்ந்த நீரில் முகத்தை கழுவவும். பிறகு ஐஸ்கட்டிகள்கொண்டு முகத்துக்கு ஒத்தடம் கொடுக்க வேண்டும். முதல்முறை செய்யும் போதே முகத்தில் பளிச்சென்று இருப்பதை பார்க்கலாம்.

விழாக்களுக்கு செல்லும் போது அதிக மேக் அப் பயன்படுத்துபவர்கள் ஆக இருக்கட்டும், சாதாரணமாக மேக் அப் பயன்படுத்துபவர்களாக இருக்கட்டும் இரவு தூங்கும் போது மேக் அப் கலைத்த பிறகு படுக்கவேண்டும். இல்லையெனில் அதில் இருக்கும் இரசாயனங்கள் சருமத்தில் பாதிப்பை உண்டாக்கும்.

அரிசி மாவு – 2 டீஸ்பூன், தேன் – ஒரு ஸ்பூன், கற்றாழை பசை 2 டீஸ்பூன் இவை மூன்றையும் ஒன்றாக கலந்து முகத்தில் ஐந்து நிமிடம் மசாஜ் செய்யவும். இதன் மூலம் முகப்பரு ஏற்படுத்தும் பாக்டீரியா மற்றும் கிருமிகள் வெளியேற்றப்படும். தேன் வாயிலாக சருமத்தின் கரும்புள்ளிகள் நீங்கும்.

முகத்தை வெண்மையாக்குவதில் அரிசி மாவும் வெள்ளரியும் நல்ல பலனை தருகின்றன. 1 டேபிள் ஸ்பூன் அரிசி மாவுடன் 1 டீஸ்பூன் வெள்ளரி சாறு கலந்து முகம், கழுத்து என பூசி 15 நிமிடம் கழித்து கழுவவும். முகம் பளபளப்புடன் தோன்றும்.





உன் அன்பு

உண்மையானால்

நீ கவலைபடாதே

நம் பிரிவின்

தூரத்திலும்

அதிகம்

நேசிக்கப்படுவாய்!

இன்னும் எத்தனை

பிறவிகள்

எடுத்தாலும் உன்னை

காதலிக்க தேடி

வருவேன்



## முகத்தில் வழியும் எண்ணெய் தன்மையை போக்க உதவும் சில அழகு குறிப்புகள்.....!!

முகத்தில் அதிகம் எண்ணெய் வடிந்தால் முதலில் முகத்தை அடிக்கடி கழுவ வேண்டும். இதனால் முகத்தில் எண்ணெய் பசை குறைந்து முகம் புத்துணர்ச்சியுடன் இருக்கும்.

மேலும், முகத்தில் சோப்பு போட்டு கழுவுவதற்கு பதில் கடலை மாவு போட்டு கழுவினால் முகம் எண்ணெய் பசை விலகி பளபளப்பாக இருக்கும்.

முட்டையின் வெள்ளைக் கருவை முகத்தில் தடவி 15 நிமிடம் கழித்து முகத்தைக் கழுவ வேண்டும். இம்முறையை தினமும் செய்து வந்தால், நல்ல மாற்றத்தை காணலாம்

தக்காளியை நன்றாக சாறு பிழிந்து அதை முகத்தில் தடவி சிறிது நேரம் ஊறவைத்து முகத்தை கழுவினால் எண்ணெய் பசை நீங்கி முகம் பளிச்சென மாறும். முகத்தில் மோரை பூசி சிறிது நேரத்திற்குப்பின் கழுவி வந்தால் எண்ணெய் தன்மை குறையும்.

புதினா இலைகளை அரைத்து சாறு எடுத்து, அந்த சாற்றினை சருமத்தில் தடவி சிறிது நேரம் ஊறவைத்து கழுவி வர, சருமத்தில் அதிகப்படியான எண்ணெய் பசை சுரப்பது தடுக்கப்படும். இம்முறையை தினமும் செய்து வந்தால் நல்ல பலன் கிடைக்கும்.

கற்றாழை ஜெல்லை முகத்தில் தடவி 10 நிமிடம் ஊற வைத்து, பின் கழுவ வேண்டும். இப்படி எண்ணெய் பசை சருமத்தினர் தினமும் செய்து வந்தால், சருமத்தில் எண்ணெய் பசை கட்டுப்படுத்தப்படுவதோடு, சருமத்தின் நிறமும் அதிகரித்துக் காணப்படும்.



## கண்களை சுற்றியுள்ள கருமையை போக்க உதவும் சில குறிப்புகள்...!!

கற்றாழை:– ஒரு பௌலில் 1 டேபிள் ஸ்பூன் கற்றாழை ஜெல், 1 டேபிள் ஸ்பூன் வெள்ளரிக்காய் ஜுஸ் சேர்த்து ஒன்றாக கலந்து கொள்ள வேண்டும்.

பின் அந்த கலவையை கண்களைச் சுற்றி தடவ வேண்டும். வேண்டுமானால், இத்துடன் 1 டீஸ்பூன் ப்ளாக் டீ சேர்த்து கொள்ளலாம்.

20 நிமிடம் நன்கு ஊறியதும், நீரில் நனைத்த பஞ்சுருண்டையால் கண்களைச் சுற்றி துடைத்து எடுக்க வேண்டும். இப்படி தினமும் இரவு தூங்கும் முன் செய்து வந்தால், 5 நாட்களில் கருவளையங்கள் காணாமல் போகும்.



பாதாம் எண்ணெய்:– தினமும் இரவு தூங்கும் முன் பாதாம் எண்ணெயைக் கொண்டு கண்களைச் சுற்றியுள்ள பகுதியில் சிறிது நேரம் மசாஜ் செய்து, இரவு முழுவதும் ஊற வைத்து, மறுநாள் காலையில் முகத்தைக் கழுவ வேண்டும்.

இப்படி தினந்தோறும் செய்யும் போது, நாளுக்கு நாள் கருவளையங்கள் மெதுவாக மறைய ஆரம்பிப்பதை நீங்களே காண்பீர்கள்.

எலுமிச்சை:– எலுமிச்சையில் ப்ளீச்சிங் பண்புகள் மற்றும் விட்டமின் சி உள்ளது. இத்தகைய எலுமிச்சையின் சாற்றுடன் சிறிது நீர் சேர்த்து, அதை ஒரு பஞ்சு உருண்டையில் நனைத்து, கண்களை மூடி கண்களின் மேல் வைத்து, 1/2 மணிநேரம் ஊறவைக்க வேண்டும்.

இப்படி ஒரு நாளைக்கு 2 அல்லது 3 முறை என ஓரிரு நாட்கள் செய்தால், கண்களைச் சுற்றியுள்ள கருவளையங்களை மறைவதைக் காணலாம்.

தொகுப்பு :– ஹாசினி

## சிங்களத் தலைமைகள் இனப்படுகொலைகளை பல்வேறு வடிவங்களில் முன்னெடுத்தன

கடந்தவார தொடர்ச்சி...

தமிழ்மக்களது போராட்டம் உரிமைப் போராட்டமாகத்தான் ஆரம்ப காலகட்டத்தில் முன்னெடுக்கப்பட்டது. தமிழ்மக்கள் தங்க ளுடைய உரிமைகளை வென்றெடுப்பதற்காக சாத்வீகப் போராட்ட வடிவத்தையே பின்பற்றினார்கள். தமிழ்மக்களது உரிமைப் போராட்டம் இராணுவ பலத்தின் மூலம் பல்வேறு சந்தர்ப்பங்களில் எதிர்கொள்ளப்பட்டது. சாத்வீகப் போராட்டங்கள் இராணுவ ஒடுக்குமுறையாலும் இனப் படுகொலைகளாலும் சிங்கள ஆட்சியாளர்களால் அடக்கப்பட்டன. இந்த நிலையில் இராணுவ ஒடுக்கு முறைகளையும், இனப் படுகொலைகளையும்எதிர்கொள்ளவே இளைஞர்கள் ஆயுதம் தாங்கினார்கள். இதனால் தமிழ்மக்களது உரிமைப் போராட்டங்கள் தேசிய விடுதலைப் போராட்டமாகப் பரிணமிக்கலாயின.

இந்தநிலையில்சிங்களபௌத்தபேரினவாதம்இனப்படுகொலைகளைத்தீவிரப்படுத்தலாயிற்று. மறுபக்கத்தில் தமிழ்த் தேசிய விடுதலைப்போராட்டம் தமிழர் தாயகத்தை விடுவிக்கவும் அவர்களது உயிர், உடமைகளைப் பாதுகாக்கவும் விரிவாக்கம் பெற்றபோது அதுவொரு மக்கள் போராட்டமாக விரிவடையலாயிற்று. இந்தக் கட்டத் தில் விடுதலைப்புலிகளுக்கு அரச-ியல், இராணுவ பரிமாணங்களில் போராட்டத்தை முன்னெடுக்கவேண்டிய தேவை. நிலை-லமை ஏற்பட்டது. அதனால் விடுதலைப்புலிகள் ஒரு விடுதலை இராணுவமாகவும் அதேச-வளை யில் தமிழ்த்தேசியப் பாதுகாப்புப் படையாக வும் பல்வேறு தளங்களில் செயற்படலாயினர்.

**நெற்றிபொறியன்**

## கத்தியில்லாமல்... ரத்தமில்லாமல்...!

கடந்தவார தொடர்ச்சி...

"நீ இந்த கொலைகளை செஞ்சியோ இல்லையோ? ஆனா ஊர் என்னன்னா நீதான் கொன்னுட்டேன்னு சொல்லுது, நம்புது. உன் மகன் பைத்தியமா குடி-காரனா அலையுறான். உன் மனைவி அவன பார்க்க சகிக்காம ஒரு நாள் அவளும் போய் சேர்ந்திடுவா. உன் குடும்பமே குட்டிச்சுவர் ஆயிடும். எப்படி வாழ்ந்த குடும்பம்? நீ உன் மகன் காதலுக்கு பச்சைக்கொடி காட்டியிருந்தா, இன்னைக்கு அவன் சந்தோஷமா வாழ்ந்திருப்பான். உன் மனைவியும் அவன பார்த்து சந்தோஷப்பட்டிருப்பா. இந்த ஊரே உன் தயாள குணத்தையும், பெருந்தன்மையையும் நினைச்சு உன்னை பாராட்டி பேசியிருப்பாங்க. ஒரு ஏழை பெண்ணை வாழ வெச்ச புண்ணியமும் கிடைச்சிருக்கும். எல்லாம் காலம் கடந்து போச்சு."

"கோவிந்தா! நான் தப்பு பண்ணிட்டேன். என் மனசே என்னை சுட்டெரிக்குது. இந்த பாவத்தை நான் எங்கே போய் எப்படி தொலைப்பேன்? இந்த தப்பை நான் எப்படி திருத்துவேன்? என் மகனே ஊர் சொல்றத நம்பிக்கிட்டு தூக்கு போட கயித்த போட்டுட்டானே? வேலைக்காரங்க பார்த்தாங்க. சரியா போச்சு. இப்பவும் நான் எதுக்கு வாழணும்னு சொல்றான். நான் என்ன செய்ய போறேன்?"

"இப்போ வருத்தப்பட்டு என்ன பிரயோஜனம்? நீ உன் தப்பை திருத்திக்கிறதுக்கு ஒரு வாய்ப்பு கிடைச்சா திருந்துவியா?"

"ஆண்டவன் அப்படி ஒரு சந்தர்ப்பத்தை தருவானா? முடிஞ்ச கதை தொடருமா?"

"இந்தா. இந்த நம்பருக்கு போன் பண்ணி செல்வியையும், அவ அப்பாவையும் பற்றி விசாரி."

திகைத்தபடியே அந்த நம்பரை வாங்கி டயல் பண்ணினார்.

"ஐயா. நீங்க யாரு என்னன்னு எனக்குத் தெரியாது. செல்வியையும், கந்தசாமியையும் திரும்ப பார்க்க நினைக்கிறேன். செல்விய என் மருமகளா ஏத்துக்கிறேன். அவங்க எங்கே இருந்தாலும் உடனே அனுப்பி வையுங்க."

"நீங்கபேசினது எல்லாம்ரிகார்டுஆயிடுச்சு. அவங்க அங்கே வந்தா உயிருக்கு ஒண்ணும் ஆபத்து இல்லையே?"

"இல்லே.... இல்லே.... என் மகன் வாழ்க்கையும், என் குடும்ப நிம்மதியும்தான் எனக்கு முக்கியம். அவங்க வந்ததும் உடனே செல்வி விவேக் கல்யாணத்தை முடிச்சு வைக்கிறேன். நாள்கிழமை கூட பார்க்க வேண்டாம்."

"பேச்சு மாறமாட்டீங்களே?"

"இல்லே ஐயா. எங்க ஊர் மாரியம்மன் மேலே சத்தியம்."

எதிர்முனையில் பேசின ஜெகன், கத்தியில்லாமல் ரத்தம் இல்லாமல் ஒரு காதலை நிறைவேற்றின சந்தோஷ த்தோடு தன் நண்பன் சங்கரிடம் பேச, ஒரு மணி நேரத்தில் சங்கர் செல்வியையும், கந்தசாமியையும் அழைத்து வந்தான். கோயிலில் கல்யாண ஏற்பாடுகளை வேகமாக செய்து வைத்திருந்தார் பரமார்த்த லிங்கம். ஊரே அந்த கல்யாணத்தில் கலந்து கொண்டு வாழ்த்தியது.

தனக்கு உதவின கோவிந்தசாமிக்கு ஜெகன் நன்றி சொன்னான். திருமணத்திற்கு பின் நின்று கொண்டு இத்தனையையும் செய்து முடித்த ஜெகனும் தன் அக்காள் குடும்பத்தினருடன் கலந்து கொண்டான். ஆனந்தக் கண்ணீர் நிறைந்த கண்களாலே விவேக்கும், செல்வியும் அவனுக்கு நன்றி சொன்னார்கள். கதை எழுத பேனாவையும், பேப்பரையும் எடுத்தான் ஜெகன். கற்பனை கட்டுக்கடங்காமல் லகானை தட்டிவிட்ட குதிரையாக வேகமாக ஓடியது.

**விஜயா கிருஷ்ணன்**

# வாழ்க்கை தத்துவங்கள் பொன்மொழிகள்

பேராசை கொண்டவன் எதிலும் திருப்தி அடைய மாட்டான். திருப்தியே மேலான செல்வம்.

ஐம்புலன்களுக்கு அடிமையாவது நல்லதல்ல. அவற்றை ஆட்சி செய்யும் நிலைக்கு மனிதன் உயர வேண்டும்.

எந்த செயலில் ஈடுபட்டாலும் அதன் விளைவாக இன்பமும் துன்பமும் இணைந்தே உண்டாகும்.

பிறரிடம் கையேந்துபவனை விட பிறருக்கு உதவ மனமில்லாமல் இல்லை என்று மறுப்பவனே இழிந்தவன்.

உடல் தூய்மையை விட மனத்தூய்மையே அவசியமானது. இதயத்தை நல்ல எண்ணத்தால் நிரப்பு.

பிறரின் இன்பத்தைக் கண்டு மகிழ்ச்சி கொள். மற்றவர் துன்பத்தில் பங்கேற்று உதவி செய்.

பொருள் இல்லாதவன் ஏழையல்ல. எப்போதும் மனதில் ஆசையைச் சுமந்து திரிபவனே ஏழை.

அறிவு என்னும் கதவு திறந்தால் மட்டுமே அறியாமை என்னும் திரை அகலும்.

ஒரு குடம் பாலில் ஒரு துளி விஷம் போல நல்லவனும் ஒரு தீய குணத்தால் ஒழுக்கமற்றவனாக ஆகி விடுவான்.

பிறருடைய குற்றம் காண்பதிலும் பிறரைக் குறை சொல்வதிலும் நேரத்தை செலவிடாதீர்கள்.

மேடு பள்ளம் நிறைந்தது தான் உலகம். அதுபோல இன்ப துன்பம் நிறைந்தது தான் மனித வாழ்க்கை.

மனிதனின் உடன்பிறந்த இயல்பு ஆசை. அதை படிப்படியாக திருத்திக் கொண்டால் மட்டுமே வாழ்வில் உயர முடியும்.

யாரையும் வெறுப்பது கூடாது. அனைவரிடமும் அன்பு காட்டுங்கள். தனித்து வாழாதீர்கள். மனம் விட்டு பிறரிடம் பழகுங்கள்.

எல்லாருக்கும் மதிப்பளிப்பதோடு, அவர்களின் வாழ்வில் குறுக்கிடாமல் இருப்பதே சிறந்த நாகரிகம்.

நல்லவர்களுடன் நட்பு கொள்ளுங்கள். நல்லறிவு தரும் நூல்களைப் படியுங்கள்.

நாக்கைக் கட்டுப்படுத்தினால் உள்ளத்தையும், உடலையும் எளிதாக வசப்படுத்த முடியும்.

பெற்ற தாயைப் போற்றுங்கள். அவளின் தியாகமே உங்களை ஆளாக்கியது என்பதை மறவாதீர்கள்.

கட்டுப்பாடான வாழ்க்கை, நல்லொழுக்கம் இருந்து விட்டால் நம் வாழ்வே சொர்க்கமாக மாறி விடும்.

நடந்ததையே எண்ணி வருந்தாதீர்கள். நிகழ்காலத்தைப் பயனுடையதாக்கும் முயற்சியில் ஈடுபடுங்கள்.

நல்லது கெட்டதை பகுத்தறியும் விவேகத்தைக் கற்றுக் கொடுப்பதே உண்மையான கல்வியாகும்.

செய்யப் போவதையே சொல்லுங்கள். சொன்னதையே செயல்படுத்துங்கள்.

மனிதன் கடமையில் பொறுப்புடன் இருந்தால், அதற்குரிய நற்பலன் கிடைத்தே தீரும்.

பூமிக்கு வரும் போது நாம் எதையும் கொண்டு வரவும் இல்லை. போகும் போது எதையும் கொண்டு போகவும் முடியாது.

# நாட்டை மறுசீரமைக்க முடியாத நிலையில் ஜனாதிபதியின் உருக்கமான உரை!

கடந்தவார தொடர்ச்சி...

கொரோனா இரண்டாவது அலை உருவான சந்தர்ப்பத்தில், புதிய வைரஸ் திரிபு மிக வேகமாகப் பரவ ஆரம்பித்தது. குறிப்பாக, தொழிற்சாலைகள், மீன் மற்றும் மரக்கறிச் சந்தைகளை அண்மித்த பகுதிகளில், இது தீவிரமடைய ஆரம்பித்தது. கொரோனா வைரஸ் தொற்றை வெற்றிகரமாகக் கட்டுப்படுத்துவதற்கு, அரசாங்கத்தினால் விதிக்கப்பட்டுள்ள இறுக்கமான சட்டங்களை, மக்கள் பொறுப்புடன் கடைபிடிக்க வேண்டும். இலங்கையில் பயணக் கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்துமாறும் சுகாதாரப் பாதுகாப்பு குறித்து கவனத்திற்கொண்டு செயற்படுமாறும் ஆலோசனைகள் வழங்கப்பட்டன. இருப்பினும், பொதுமக்கள் அதற்கு முழுமையான ஒத்துழைப்பைத் தருவதில்லை என்பதை நாம் அனைவரும் அறிவோம். எவ்வாறான போதும், இரண்டாவது அலையையும் இந்த ஆண்டின் முதற்பகுதியிலேயே நாம் பெருமளவு கட்டுப்படுத்தி இருந்தோம்.

சித்திரைப் புத்தாண்டுக் காலப்பகுதியில், பெருமளவு மக்கள், கூட்டம் கூட்டமாகப் பயணங்களை மேற்கொண்டதன் விளைவாக, கொரோனா வைரஸ் தொற்றின் மூன்றாவது அலைக்கு முகங்கொடுக்க வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். தற்போது, பல வைரஸ் திரிபுகள் நாட்டுக்குள் உருவாகி இருப்பதுடன், வேகமாகவும் அந்த வைரஸ்கள் பரவி வருவதால், முன்னைய நிலைமைகளைப் பார்க்கிலும் பாரதூரமான சூழ்நிலை உருவாகியிருக்கிறது. வைரஸ் வேகமாகப் பரவி, தொற்றாளர்களின் அளவு துரிதமாக அதிகரிக்கின்ற போது, அதற்கு விரைவாக முகங்கொடுப்பதற்கு, சுகாதாரத் துறைக்கு உள்ள மனித வளங்களும் ஏனைய வசதிகளும் போதுமானதாக இல்லை. அதனால், நாட்டை மீண்டும் முடக்கவேண்டி சூழ்நிலை, அரசாங்கத்துக்கு ஏற்பட்டது.

இத்தகைய தொற்றுப் பரவல் நிலைமைகளுடன் மேற்கொள்கின்ற போராட்டத்தில், உலகின் ஏனைய பல நாடுகளும் நாமும், அவ்வப்போது நாட்டை முடக்க வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். அந்தத் தீர்மானத்தின் பக்க விளைவுகளையும் நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். அந்த வகையில், பல்வேறு சட்டதிட்டங்களை விதிக்கவேண்டி ஏற்பட்டது.

தொழிற்சாலைகள், நிறுவனங்களில் வேலை செய்பவர்களை மட்டுப்படுத்த வேண்டி ஏற்பட்டது. இந்த நிலைமை, எமது தொழிற்சாலைகளுக்குப் பாரிய தொரு தாக்கத்தை ஏற்படுத்தியது. குறிப்பாக, இலங்கைக்கு சுமார் 5 பில்லியன் அமெரிக்க டொலர்களை வருமானமாக ஈட்டித்தரும் ஆடைத் தொழிற்றுறை. இதனால் பெரும் நட்டத்தைச் சந்தித்தது. பலர், தொழில் வாய்ப்புகளை இழந்தனர். ஏற்றுமதி வருமானம் குறைவடைந்தது.

வெளிநாடுகளிலும் தொழிற்சாலைகள் மூடப்பட்டதன் காரணமாக, எமது புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மீண்டும் நாட்டுக்கு வர ஆரம்பித்தனர். அவர்களில் பெரும்பாலானவர்கள், தங்களது தொழில்களை இழந்தனர். தொற்றுப் பரவல் அச்சம் காரணமாக இலங்கைக்கு வந்த சுமார் 2 இலட்சத்துக்கும் அதிகமானவர்களால், மீண்டும் அந்த நாடுகளுக்குச் செல்ல முடியாத சூழ்நிலை உருவாகியிருக்கிறது. இலங்கைக்குக் கிடைத்த அந்நியச் செலாவணி, இதனால் குறைவடைந்துள்ளது.

'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைத் திட்டத்தைத் தயாரிக்கும் போது, சுற்றுலாத் துறை மீதே நாம் அதிக எதிர்பார்ப்பைக் கொண்டிருந்தோம்.4.5பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்த சுற்றுலாத்துறை வருமானத்தை, 2025ஆம் ஆண்டில் 10 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை அதிகரிக்கத் திட்டமிட்டிருந்தோம். ஆனால் இன்று, முழு உலக நாடுகளும் சுற்றுலாத் தொழிற்றுறையில் பாரிய சவால்களை எதிர்நோக்கி வருகின்றன. விமான நிலையங்கள் மூடப்பட்டு, பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

இதன் விளைவாக, மூன்று மில்லியனுக்கும் அதிகமானவர்கள் தங்களது வாழ்வாதாரத்துக்காக ஏதோ ஒரு வகையில் தங்கியிருந்த சுற்றுலாத் தொழிற்றுறை, முழுமையாக வீழ்ச்சி கண்டுள்ளது. நேரடியாகவோ மறைமுகமாகவோ பல இலட்சம் தொழில்வாய்ப்புகளை நாம் இழந்திருக்கின்றோம். சுய தொழிலை மேற்கொண்டு வந்த இலட்சக்கணக்கானோரின் வருமானங்கள் இல்லாமல் போயிருக்கின்றன. இத்துறையுடன் தொடர்புபட்டவர்கள், இன்று பாரிய கஷ்டங்களுக்கு உள்ளாகி இருக்கின்றனர்.

எமது அபிவிருத்தித் திட்டத்தின் மற்றுமொரு முக்கிய எதிர்பார்ப்பாக இருந்தது, நிர்மாணத் துறையாகும். வீழ்ச்சியடைந்திருந்த நிர்மாணத் தொழிற்றுறைக்கு புத்துயிர் அளித்து, மீண்டும் அதனை முன்னேற்ற வேண்டும் என்றே நாம் எதிர்பார்த்தோம். அவ்வப்போது மேற்கொள்ளப்பட்ட நாட்டை முடக்குகின்ற நிலைமைகள் காரணமாக, இத்தொழிற்றுறை பாரியளவு பாதிக்கப்பட்டது.

நிர்மாணத்துறை நிறுவனங்களால், தேவையான முறையில் ஊழியர்களைக் கொண்டுவர முடியாத நிலைமை ஏற்பட்டது. உரிய நேரத்துக்கு மூலப்பொருட்களைக் கொண்டுவர இயலாமல் போனது. கடந்த சுமார் ஒன்றரை வருடக் காலப்பகுதியில் எதிர்பார்த்திருந்த உள்நாட்டு, வெளிநாட்டு முதலீடுகளும், பெருமளவில் எமக்குக் கிடைக்கவில்லை.

இந்த அனைத்துக் காரணங்களினாலும், நாம் ஆரம்பத்தில் திட்டமிட்டிருந்த அந்நியச் செலாவணியின் அளவு, எமக்குக் கிடைக்காமல் போயுள்ளது.இத்தகையதொரு நிலைமையின் கீழ், நாம் அந்நியச் செலாவணியை மிகவும் முறையாக முகாமைத்துவம் செய்ய வேண்டி இருக்கின்றது.

எமது தேசிய பொருளாதாரத்தின் மற்றுமொரு முக்கியத் துறையாக விளங்குவது, சிறிய மற்றும் நடுத்தரத் தொழிற்றுறையாகும். மொத்தத் தேசிய உற்பத்தியில் 50 சதவீதத்துக்கும் அதிக பங்களிப்பை வழங்கும் இந்தத் துறை, கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலால், பாரிய சிக்கலை எதிர்நோக்கியுள்ளது. அவர்களின் வர்த்தக நடவடிக்கைகளுக்குத் தொடர்ச்சியாகத் தடைகள் ஏற்பட்ட காரணத்தால், அந்த நிறுவனங்களுக்கும் வருமான வழிகள் இல்லாமல் போய், கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமலும் சம்பளத்தைக்கூட வழங்க முடியாத பாரிய கஷ்டங்களுக்கு முகங்கொடுத்திருக்கிறார்கள்.

மக்கள் மத்தியில் பணத்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. வாகனங்களைக் குத்தகைக்கு பெற்றவர்கள், அவற்றுக்கான தவணைப் பணத்தைச் செலுத்த முடியாமல் உள்ளனர். வீட்டுக் கடன் பெற்றவர்களால், அந்தக் கடன் தவணையைச் செலுத்த முடியாமல் போயுள்ளது. தினசரி கடன் பெற்று வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தவர்களுக்கு வாடிக்கையாளர்கள் இல்லாமல் போனதால், பல்வேறு கஷ்டங்களுக்கு முகங்கொடுக்க நேரிட்டது. இந்த நிலைமைகளில் இருந்து அவர்களை விடுவிப்பதற்காக, அவர்களின் கடன்களைச செலுத்துவதற்கான மேலதிகக் காலத்தை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. அந்த வகையில், சிறிய மற்றும் நடுத்தரத் தொழிற்றுறையினருக்குக் கடன் தவணை வசதியை வழங்குவதற்காக, அரசாங்கம் 400 பில்லியன் ரூபாய்கும் அதிக நிதியை ஒதுக்கியது.



நாம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் வரிகளைக் குறைத்ததன் காரணமாக, அரச வருமானங்கள் குறைந்துள்ளதாக எதிர்க்கட்சியினர் எம்மீது குற்றஞ்சுமத்துகின்றனர். அவ்வாறு நாம் செய்யாதிருந்திருந்தால், இந்தத் தொற்றுப் பரவல் காரணமாகப் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களின் நிலைமை, இன்னும் மோசமடைந்திருக்கும்.

கடந்த அரசாங்கம், மக்கள் மீது பாரிய வரிச்சுமையைச் சுமத்தியிருந்தது. 2015 - 2019 காலப்பகுதியில், நேரடியானதும் மறை முகமானதுமான வரிகள் இரட்டிப்பாகக் காணப்பட்டன. நாம் அதிகாரத்துக்கு வந்த உடனேயே, அந்தக் கஷ்டத்தில் இருந்து மக்களை விடுவித்தோம். இந்த அனைத்துத் தடைகளுக்கு மத்தியிலும், மக்களை வாழ வைப்பதற்கான பொறுப்பை நிறைவேற்றி இருக்கிறோம்.

ஒவ்வொரு வருடமும், வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் நிதி ஒதுக்கி மக்களுக்கு வழங்கப்படும் நிவாரணங்கள், அரசாங்கத்திடம் ஏராளம் உள்ளன. அவற்றில், சமூர்த்தி கொடுப்பனவுக்காக 50 பில்லியன் ரூபாயும் இலவச மருத்துவச் சேவையைப் பெற்றுக்கொடுப்பதற்காக 90 பில்லியன் ரூபாயும், அங்கவீனமுற்ற படைவீரர்களுக்காக 40 பில்லியன் ரூபாயும், ஓய்வூதியக் கொடுப்பனவுகளுக்காக 250 பில்லியன் ரூபாயும், உர மானியங்களுக்காக 35 பில்லியன் ரூபாயும், பாடசாலை மாணவர்களுக்காகசீருடைகள், பாடநூல்கள் மற்றும் போஷாக்கான உணவுகளுக்காக 25 பில்லியன் ரூபாயும், நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களைப் பராமரிப்பது உள்ளிட்ட மேலும் பல நிவாரணங்களுக்காக 70 பில்லியன் ரூபாயும் என, மொத்தமாகச் சுமார் 560 பில்லியன் ரூபாய் செலவிடப்படுகிறது.

கொரோனா வைரஸ் தொற்றுக்கு முகங்கொடுப்பதற்கு, புதிதாகப் பல செலவு களை அரசாங்கம் சுமக்கவேண்டியதாயிற்று. தொற்று நிலைமைகள் காரணமாக நாடு முடக்கப்பட்டிருந்த அனைத்துச் சந்தர்ப்பங்களிலும், நாளாந்த வருமானத்தை இழந்து அனாதரவான நிலைக்கு ஆளான மக்களுக்கு 5,000 ரூபாய் கொடுப்பனவு வழங்க, ஒவ்வொரு முறையும் நாம் சுமார் 30 பில்லியன் ரூபாயைச் செலவிட்டிருக்கிறோம். இதுவரையில் பல சந்தர்ப்பங்களில், அரசாங்கம் இந்தச் செலவை ஏற்றிருக்கிறது. கொரோனா வைரஸ் தொற்று தொடர்பில், சுகாதாரத் துறையுடன் சம்பந்தப்பட்ட பல மேலதிகச் செலவுகளை அரசாங்கம் ஏற்றிருக்கின்றது.

பிசிஆர், அன்டிஜன் பரிசோதனைகளுக்காகவும் தொற்றுக்குள்ளானவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கான சிகிச்சை நிலையங்களைப் புதிதாக உருவாக்குவதற்காகவும், அரசாங்கம் மேலதிகச் செலவுகளை ஏற்றிருக்கின்றது. அரசாங்கத்தால் பராமரிக்கப்படுகின்ற தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கான செலவுகளுக்கு மேலதிகமாக, வீடுகளில் தனிமைப்படுத்தப்படுகின்ற அனைத்துக் குடும்பங்களுக்கும், இரண்டு வாரங்களுக்குச் சுமார் பத்தாயிரம் ரூபாய் பெறுமதியான நிவாரணப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன. கொரோனா பிரச்சினை உருவான காலம் முதல் இதுவரையில், 260 பில்லியன் ரூபாய்க்கும் அதிகமான தொகையை, மக்கள் நிவாரணங்களுக்காக அரசாங்கம் செலவிட்டுள்ளது. திட்டமிடப்பட்டிருந்த நிவாரணங்களுடன் கொரோனா செலவுகளும் சேர்ந்துகொள்கின்ற போது, அது கடந்த வருடம் நாட்டின் மொத்த அரச வருமானமான 1,380 பில்லியன் ரூபாயின் அரைவாசியாகக் காணப்படுகிறது. கொரோனா வைரஸ் தொற்றால் ஏற்பட்ட கஷ்டமான சூழ்நிலையிலும், அரசாங்கம் ஒருபோதும் 1.4 மில்லியனுக்கும் அதிகமான அரச ஊழியர்களின் சம்பளத்தைக் குறைப்பதற்கோ கொடுப்பனவுகளை நீக்குவதற்கோ நடவடிக்கை எடுக்கவில்லை. எமது அந்நியச் செலாவணி வருமானம் குறைந்த போதும், அரசாங்கத்தினால் வெளிநாட்டு நிதி நிறுவனங்களுக்குச் செலுத்தவேண்டியிருந்த கடன் தவணைகளைச் செலுத்தத் தவறியதில்லை.

கடந்த காலத்தில், பல்வேறு அரசாங்கங்களினால் எடுக்கப்பட்டிருந்த கடன் காரணமாக, நாம் வருடம் ஒன்றுக்கு 4 பில்லியன் அமெரிக்க டொலர்கள் என்ற பாரிய கடன் தவணையைச் செலுத்த வேண்டியிருந்தது. அரசாங்கத்தினால் இந்தக் கடனைச் செலுத்த முடியாது போகும் என்ற ஒரு கருத்தை, மக்கள் மத்தியில் எதிர்க்கட்சி கொண்டு சென்றது. இருப்பினும், நாம் நாட்டை அபகீர்த்திக்கு உட்படுத்தாது, அந்த அனைத்துக் கடன் தவணைகளையும் உரிய காலத்தில் செலுத்தியிருக்கிறோம்.

இந்த நிலைமையின் கீழ், அந்நியச் செலாவணி பிரச்சினையைத் தவிர்ப்பது, அரசாங்கத்தின் பொறுப்பாகும். இதன் காரணமாக, ஓர் அரசாங்கம் என்ற வகையில், நாம் சில முக்கியத் தீர்மானங்களை எடுக்கவேண்டி ஏற்பட்டது. சில அத்தியாவசியமற்ற இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதற்கும் குறிப்பாக ஆடம்பரப் பொருட்களை இறக்குமதி செய்வதைக் கட்டுப்படுத்துவதற்கும் நாம் தீர்மானித்தோம். இவ்வாறான தடைகளைத் தொடர்ந்தும் முன்னெடுக்க நாம் எதிர்பார்க்கவில்லை. நாட்டை நேசிக்கின்ற, எதிர்காலத்தை நம்பிக்கையுடன் பார்க்கின்ற அறிவார்ந்த மக்கள், இந்தத் தற்காலத் தேவையை விளங்கி, இந்தப் பிரச்சினைகளிலிருந்து மீள்வதற்கு, எம்முடன் ஒத்துழைப்பார்கள் என்று நாம் எதிர்பார்க்கின்றோம்.நாம் முன்னெடுக்கின்றன அபிவிருத்திப் பணிகள், உரிய முறையில் மக்களிடம் சென்றடையவில்லை என்பது, எமது அரசாங்கத்தின் குறைபாடாக இருந்து வருகிறது.

**தொடரும்...**

# அறிவியல் உலகம்

## 5000கோடியைத் தாண்டிய சீன விரைவஞ்சல் சேவை

புதிய புள்ளிவிவரங்களின்படி, ஜுலை 4ஆம் நாள் வரை 2021ஆம் ஆண்டில் சீனாவின் விரைவஞ்சல் சேவையின் மொத்த எண்ணிக்கை 5000கோடியைத் தாண்டியுள்ளது. இது, 2018ஆம் ஆண்டு முழுவதிலும் வழங்கப்பட்ட சேவைக்குச் சமமானதாகும். இவற்றுள் கிராமப்புறங்களிலுள்ள விரைவஞ்சல் சேவை 30விழுக்காட்டை வகித்துள்ளது. சீராக வளரும் சீனப் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கு விரைவஞ்சல் சேவையின் வேகமான வளர்ச்சியும் ஒரு முக்கிய ஆதாரமாகும். மேலும், கிராமப்புறங்களில் அதிகரித்துள்ள சேவை அதற்கு புதிய உந்து ஆற்றலாக இருக்கும்.

தற்போதைய நிலவரப்படி சீனாவின் தினசரி விரைவஞ்சல் சேவை எண்ணிக்கை சுமார் 30 கோடியாகும். இதன்மூலம் தினசரி சுமார் 60கோடி மக்களுக்குச் சேவையளிக்கப்படுகின்றது.



## நலம் தரும் ‘அதிர்வு’ வைத்தியம்!

உடல், உள்ளம் இரண்டையும் பராமரிக்க வேண்டும் என்ற உணர்வு, பெருந்தொற்று காலத்தில் மேலோங்கியுள்ளது. இதற்கு ஈடுகொடுக்க தொழில்நுட்பத்தின் துணையோடு 'சவுண்ட் பெட்' போன்ற படுக்கைகள் வந்துள்ளன.ஒரே நேரத்தில் உடல் மற்றும் உள்ளத்தை ஓய்வு நிலைக்கு கொண்டு செல்ல, நவீன தொழில்நுட்பத்தை இத்தகைய படுக்கைகள் பயன்படுத்துகின்றன.

'சவுண்ட் பெட்' படுக்கை தூக்கத்திற்கு அல்ல. ஒருவர் அதன் மீது படுத்தவுடன், மிக மெல்லிய அதிர்வுகளை தரும். உடலின் வெவ்வேறு பாகத்திற்கு, வெவ்வேறு அலைவரிசையில் அதிர்வுகளை ஏற்படுத்தும் வசதி இப்படுக்கையில் உள்ளது. இந்த மெல்லிய அதிர்வுகளால், படுத்திருப்பவரின் தசைகளும், நரம்புகளும் நல்ல ஓய்வு நிலைக்கு செல்லும். அது மட்டுமல்ல, காதில் மாட்டியிருக்கும் ஒலிக்கருவி மூலம், படுக்கையின் அதிர்வுகளுக்கு ஏற்ப இனியஓசைகள் வரும். இந்த நிலையில் மன இறுக்கங்கள் தளர்ந்து, படுத்திருப்பவரின் மனம் உள்நோக்கிய தியான நிலைக்கு செல்லும்.


'ஒலி சிகிச்சை' என்ற புதிய துறையின் வல்லுனர்கள் 'ஓபஸ்' படுக்கையை வடிவமைக்க உதவி உள்ளனர். சில நிமிடங்கள் உடலுக்கு நல்ல ஓய்வு கிடைப்பது, மனம் விரைவில் ஒருமித்த நிலைக்கு செல்வது போன்றவற்றால் ஓபஸ் போன்ற படுக்கை தொழில்நுட்பங்களுக்கு நல்ல வரவேற்பு இருக்கும் என ஓபசின் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்து உள்ளனர்.



## சென் சோ 12 விண்கலத்தின் விண்வெளி வீரர் விண்கலனிலிருந்து வெளியேறினார்!

சீன மனிதரை விண்வெளிக்கு ஏற்றிச்செல்லும் திட்டப்பணி அலுவலக செய்தியின் படி, 2021ஆம் ஆண்டு ஜீலை 4ஆம் நாள் 8.11 மணி, சென் சோ 12 விண்கலத்தின் விண்வெளி வீரர் லியு போமிங், விண்வெளி கலனின் கதவைத் திறந்தார். 11.02 மணி வரை, விண்வெளிவீரர்கள் லியு போமிங், டாங் /ஹங்போ இருவரும் சீனா சுயமாக ஆராய்ந்து தயாரித்த விண்வெளி ஆடைகளை அணிந்து வெற்றிகரமாக அறையிலிருந்து வெளியே வந்தனர்.

விண்வெளி கலனிலுள்ள விண்வெளிவீரர் நியே ஹெய்சங், அவர்களுடன் ஒத்துழைத்து, பணி புரிவார் என்பது குறிப்பிடத்தக்கது.




## உலகின் முதல் ‘ஆய்வக இறைச்சி’ தொழிற்சாலை!

கோழி, மீன் போன்ற பிராணிகளின் செல்களை, ஒரு கிண்ணியில் வளர்க்க முடியும் என்று விஞ்ஞானிகள் நிரூபித்து பல ஆண்டுகள் ஆகின்றன. தற்போது, பிரபல உணவகங்களே ஆய்வுக்கூடத்தில் வளர்த்தெடுக்கப்பட்ட இறைச்சியை ஏற்க துவங்கியுள்ளன.

இஸ்ரேல் சும்மா இருக்குமா? 'கல்ச்சர்டு மீட்' எனப்படும் ஆய்வக இறைச்சி ஆராய்ச்சியில் முன்னணியில் இருக்கும் இஸ்ரேல், தற்போது உலகின் முதல் ஆய்வுக்கூட இறைச்சியை, பெருமளவில் தயாரிக்கும் தொழிற்சாலையை துவங்கியுள்ளது.

'பியூச்சர் மீட் டெக்னாலஜீஸ்' உருவாக்கியுள்ள இந்ததொழிற்சாலையில், ராட்சத இயந்திரங்களுக்கு பதில், ஏணி தேவைப்படுமளவுக்கு உயரமான உயிரி கலன்கள் நிறுவப்பட்டுள்ளன.



இக்கலன்களில்பன்றி, மாடு போன்றவற்றின் செல்கள், பல்கி பெருகி, நேரடி யாக இறைச்சியாகவே வளர்கின்றன. பண்ணை முறையில் வளர்ப்பதைவிட 10 மடங்கு கூடுதல் இறைச்சி இதில் கிடைப்பதாக பியூச்சர் மீட் டெக்னாலஜீசின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பண்ணை முறையில் தேவைப்படுவதைவிட, 96 சதவீதம் குறைவான நீரும், 99 சதவீதம் குறைவான நிலமும் தான் ஆய்வக இறைச்சிக்கு தேவை.இதனால் தான், இதை 'செல் வேளாண்மை' என்று சிலர் அழைக்கின்றனர். எல்லாவற்றையும்விட, இஸ்ரேலிய ஆலையில், எந்த விலங்கும் கொல்லப்படாமலேயே, தினமும் 5 ஆயிரம் 'பர்கர்'களுக்கு தேவையான இறைச்சி தயாராகிறது. இனி விரைவில், கோழி முதல் இறால் வரை எல்லா வகை அசைவ உணவுகளும் இதே செல் வேளாண்மை முறையில் கிடைக்கும் என்பதில் யாருக்கும் சந்தேகம் இருக்க முடியாது.

**பூமியின் எடையில் பாதிக்கு மேல் எடுத்துக் கொள்பவை நுண்ணுயிரிகள் தான். அவை சாதாரண கண்ணுக்கு தெரிவதில்லை என்பதாலேயே அவற்றை நாம் குறைத்து எடை போட்டுவிடுகிறோம்.**

**ஜான் கிரெய்க் வென்டெர்**
**அமெரிக்க உயிரியலாளர்**



# விளையாட்டு செய்திகள்

## இலங்கை கிரிக்கெட்டின் கொள்கைதான் தோல்விக்குக் காரணம்

இலங்கை கிரிக்கெட்டின் கொள்கை தான் இலங்கை அணியின் அண்மைக்கால தொடர் தோல்விகளுக்கு முக்கிய காரணம் என இலங்கை அணியின் முன்னாள் தலைவரும், நட்சத்திர வீரருமான குமார் சங்கக்கார தெரிவித்துள்ளார். இலங்கை மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கிடையில் தற்போது நடைபெற்று வருகின்ற கிரிக்கெட் சுற்றுப்பயணம் தொடர்பில் பலரும் தமது அதிருப்தியினை வெளிப்படுத்தி வருகின்றனர்.

இந்தத் தொடரில் இலங்கை அணி வீரர்கள் தொடர்ச்சியாக வெளிப்படுத்திய மோசமான ஆட்டம் குறித்து முன்னாள் வீரர்கள், ரசிகர்கள் தமது விமர்சனங்களை தொடர்ந்து முன்வைத்து வருகின்றனர்.

இந்த நிலையில், இங்கிலாந்து தொடரில் வர்ணனையாளராக செயல்பட்டு வருகின்ற குமார் சங்கக்கார, பிபிசி செய்திச் சேவைக்கு விசேட நேர்காணல் ஒன்றை வழங்கியிருந்தார். இதில் இலங்கை அணியின் அண்மைக்கால தோல்விகளுக்கான காரணம் என்ன என்பது பற்றி அவர் கருத்து தெரிவிக்கையில்,

"ஒரு இலங்கையர் என்ற வகையில் எனது நாட்டைப் பற்றி நான் மிகவும் பெருமைப்படுகிறேன். இலங்கையின் வரலாற்று முக்கியத்துவம் மற்றும் எனது வாழ்க்கையின் ஒரு முக்கிய அங்கமாக இருந்த கிரிக்கெட் விளையாட்டு குறித்து நான் மிகவும் பெருமைப்படுகிறேன். கடந்த காலங்களில், பல தலைமுறை கிரிக்கெட் வீரர்கள் விளையாடுவதை நாங்கள் கண்டிருக்கிறோம். இலங்கை கிரிக்கெட்டின் நாமத்தை முழு உலகிற்கும் கொண்டு செல்ல அவர்கள் மகத்தான சேவையாற்றினார்கள்.

தற்போதைய இலங்கை அணியில் நான் எந்தவொரு வித்தியாசத்தையும் காணவில்லை. வீரர்களிடம் காணப்படுகின்ற ஆர்வம், உறுதிப்பாடு மற்றும் நாட்டிற்காக விளையாடுவதற்கான விருப்பத்தை நான் காண்கிறேன். அவர்கள் தமது நாட்டுக்காக விளையாட கிடைத்தமை தொடர்பில் பெருமைப்படுகிறார்கள். அவர்களுக்கு திறமைகளை வெளிப்படுத்த கிரிக்கெட் நிர்வாகத்தில் காணப்படுகின்ற காலாவதியான கருத்துக்கள் முக்கிய தடையாக உள்ளன. அவற்றை மாற்றுவதற்கு இலங்கை கிரிக்கெட் சபை தயக்கம் காட்டுவதே இதற்கு முக்கிய காரணம்.

இது இலங்கை கிரிக்கெட்டின் நாமத்தை வளர்ப்பதற்குப் பதிலாக ஒரு சுயநலம் கொண்ட ஒரு பகுதிக்கு தள்ளப்படுவதை அவதானிக்கலாம். கடந்த காலங்களில் இலங்கை அணி



தொடர்ந்து தோல்வியை சந்தித்து வருகின்ற நிலையில், தரவரிசையில பல புதிய மற்றும் சிறிய அணிகளையும் விட இலங்கை அணி பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றது. இலங்கை கிரிக்கெட் கட்டமைப்பை மாற்றி வெற்றியின் பாதையில் நுழைய வேண்டிய நேரம் வந்துவிட்டது" என்று குமார் சங்கக்கார கருத்து தெரிவித்தார்.

"இலங்கை கிரிக்கெட் தற்போதைய கொள்கைகள் 1996இல் இலங்கை அணி உலகக் கிண்ணத்தை வென்றபோது இருந்த கொள்கைகள் தான் என நான் அடிக்கடி கேள்விப்பட்டுள்ளேன். ஏனைய நாடுகள் புதிய கொள்கைகள் மற்றும் மிகவும் வலுவான முதல்தர போட்டிகளுடன் எங்களை கடந்து சென்றுவிட்டன. அவர்களின் தேர்வுக் கொள்கைகள் நிறைய மாறிவிட்டன.

ஆனால் இலங்கை அந்த விடயத்தில் மிகவும் தாமதமாகிவிட்டது என்று நினைக்கிறேன். இந்த கொள்கைகளின் எதிர்மறையான தாக்கத்தை நாங்கள் கண்கூடாக பார்க்கிறோம்.

எனவே, நாங்கள் தற்போது மாற வேண்டும். இது மற்றவர்களிடம் ஆலோசனைகளைப் பெறுவதைப் போல இலகுவான விடயமல்ல. ஒருவேளை, அவர்களும் தவறாக இருக்கலாம். இங்கே மிக முக்கியமான விடயம் நாட்டுக்கு சிறந்ததைச் செய்வது தான்.

நாட்டுக்காக விளையாடுகின்ற சிறந்த கிரிக்கெட் வீரர்களை உருவாக்குவது தான் இங்கு முக்கியமானது. தங்களது தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல்களையும், சித்தாந்தங்களையும் ஒதுக்கி வைத்துவிட்டு, இலங்கை அணியை மீண்டும் உலகின் நம்பர் ஒன் அணியாக மாற்றுவதற்கு தேவையான முடிவுகளை எடுக்க அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்" என்று குமார் சங்கக்கார வலியுறுத்தினார்.

"இலங்கை கிரிக்கெட்டில் உள்ள அனைத்து தனிப்பட்ட வேறுபாடுகள், தனிப்பட்ட சண்டைகள் மற்றும் அனைத்து முகாம்களையும் ஒதுக்கி வைத்துவிட்டு ஒன்றிணைந்து செயல்பட வேண்டிய நேரம் இது என்று நான் நினைக்கிறேன்.

நாம் உண்மையிலேயே நாட்டை நேசிக்கிறோம் என்றால், நாம் இலங்கை கிரிக்கெட்டை நேசிக்கிறோம் என்றால், இந்த நேரத்தில் மிக முக்கியமான கேள்வி என்னவென்றால், இலங்கை அணியை எவ்வாறு உலகின் நம்பர் ஒன் அணியாக மாற்றுவது என்பதுதான். இந்த கேள்விக்கான பதிலை இப்போது நாம் கண்டுபிடிக்க வேண்டும். இதை தொடர்ந்து நீடிப்பது என்பது அணிக்கு மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதாகும்.

துரதிஷ்டவசமாக, இலங்கை வீரர்கள் சிறப்பாக விளையாடாதபோது, அவர்கள் தோல்வியின் பின்னணியில் காரணங்களைத் தேடுவதில்லை. எல்லோரும் வீரர்களை நோக்கி விரல் நீட்டுகிறார்கள். நான் அதைப் பற்றி மிகவும் வருந்துகிறேன்.

ஏனென்றால் அவர்களிடம் இருக்கும் திறமை எனக்குத் தெரியும். நாட்டிற்காக விளையாடுவதற்கான விருப்பத்தையும் அவர்கள் செய்யும் தியாகங்களையும் நான் அறிவேன். அவர்கள் எங்களை விட இலங்கை அணியை ஒரு சிறந்த இடத்திற்கு கொண்டு வர முடியும். எங்களால் முடிந்த ஒவ்வொரு வாய்ப்பையும் அவர்களுக்கு வழங்க வேண்டும்" என குமார் சங்கக்கார தெரிவித்தார்.

## ஒரு நாள் கிரிக்கெட் வரலாற்றில் மிக மோசமான சாதனையை படைத்தது இலங்கை

இங்கிலாந்திடம் இரண்டாவது ஒரு நாள் போட்டியிலும் தோல்வியடைந்ததின் மூலம் ஒரு நாள் கிரிக்கெட் வரலாற்றில் இலங்கை மோசமான சாதனையை படைத்துள்ளது.

ஒரு நாள் கிரிக்கெட் வரலாற்றில் அதிக போட்டிகளில் தோல்வியடைந்த நாடுகள் பட்டியலில் இந்தியாவை பின்னுக்கு தள்ளி இலங்கை முதலிடத்தை பிடித்துள்ளது.

இலங்கை இப்போது 428 போட்டிகளிலும், இந்தியா மற்றும் பாகிஸ்தான் முறையே 427 மற்றும் 414 போட்டிகளிலும் தோல்வியடைந்துள்ளன.

1975-ல் ஒருநாள் போட்டிகளில் அறிமுகமானதில் இருந்து இப்போது வரை இலங்கை 860 போட்டிகளில் விளையாடியதுடன் 390 போட்டிகளில் வென்று, 428 தோல்வியடைந்துள்ளது.

வெற்றி ∴ இழப்பு விகிதத்தைப் பொறுத்தவரை, இலங்கையின் விகிதம் 0.913 ஆகும். இந்த பட்டியலில் வெற்றி ∴ இழப்பு விகிதம் 1.77 உடன் தென் ஆப்பிரிக்கா முதலிடத்தில் உள்ளது குறிப்பிடத்தக்கது.



## வெற்றிக்கு பின் கோஹ்லியின் மார்பில் சாய்ந்து கூறியது என்ன?

உலக டெஸ்ட் சாம்பியன் ஷிப் இறுதிப் போட்டியில், வெற்றிக்கு பின் கோஹ்லியின் மார்பில் சாய்ந்தது குறித்து, நியூசிலாந்து அணியின் கேப்டன் கானே வில்லியம்சன் கூறியுள்ளார்.

இங்கிலாந்தில் நடைபெற்ற உலக டெஸ்ட் சாம்பியன் ஷிப் தொடரின் இறுதி ஆட்டத்தில் நியூசிலாந்து அணி 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் போது நியூசிலாந்து அணியின் கேப்டன், கானே வில்லியம்சன், கோஹ்லியின் மார்பில் சாய்ந்து பேசுவது போன்ற புகைப்படம் இணையத்தில் வைரலாகியது.

இது குறித்து தற்போது ஊடகம் ஒன்றிற்கு வில்லியம்சன் அளித்துள்ள பேட்டியில், இறுதிப்போட்டியில் வெற்றிபெற்ற அந்த தருணம் மிகச் சிறந்த தருணம். அது அற்புதமான உணர்வை கொடுத்தது. இந்தியா போன்ற பலமான அணியை வீழ்த்துவது எவ்வளவு கஷ்டம் என்பது எனக்கு தெரியும்.

வெற்றிக்குப் பிறகு கோலியின் நெஞ்சில் சாய்ந்துக்கொண்டேன்.

ஏனெனில் கோலிக்கும் எனக்குமான உறவு பல ஆண்டுகளுக்கு முன்னதாக ஏற்பட்டது. கிரிக்கெட்டையும் கடந்து நாங்கள் ஆழமான நண்பர்கள். எங்களுக்குள் ஒரு ஆழமான நட்பு இருக்கிறது. இது எங்கள் இருவருக்குமே தெரியும் என கூறியுள்ளார்.



# உலக செய்திகள்

## ஆப்கானின் முக்கிய விமான நிலையத்தை விட்டு அமெரிக்க- நேட்டோ படைகள் வெளியேறின!

அமெரிக்க மற்றும் நேட்டோ படைகள், ஆப்கானிஸ்தானில் உள்ள பாக்ராம் விமான நிலையத்தை விட்டு வெளியேறிவிட்டன. ஆப்கானிஸ்தானில் இருந்து வெளிநாட்டு சக்திகளை முழுமையாக வெளியேற்றும் முக்கிய நடவடிக்கையாக இது பார்க்கப்படுகின்றது.

தலிபான் மற்றும் அல்கொய்தாவுக்கு எதிரான போரின் மையமாக 20 ஆண்டுகளாக உள்ள பாக்ராம் விமான நிலையத்தை விட்டு துருப்புக்கள் வெளியேறியிருப்பது அரசாங்கத்துக்கு மிகப்பெரிய ஆபத்தை ஏற்படுத்தக்கூடுமென எச்சரிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் செப்டம்பர் 11ஆம் திகதிக்குள் அமெரிக்கப் படைகள் போய்விடும் என்று ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.



'செப்டம்பர் 11' காலக்கெடு 2001ஆம் ஆண்டு அமெரிக்காமீதான அல்-கொய்தா தாக்குதலின் ஆண்டு நிறைவாகும். இந்த தாக்குதலில் கிட்டத்தட்ட 3,000 பேர் உயிரிழந்தனர். இதுவே ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா தலைமையிலான படையெடுப்பைத் தூண்டியது. சுமார் 2,500- 3,500 அமெரிக்க துருப்புக்கள் சமீப காலம் வரை ஆப்கானிஸ்தானில் இருப்பதாக கருதப்பட்டது. மேலும் அவர்கள் 7,000 நட்பு வெளிநாட்டு துருப்புக்களுடன் வெளியேற உள்ளனர்.

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலின் சர்வதேச விமான நிலையத்தை பாதுகாப்பதே ஒருங்கிணைந்த படையின் மீதமுள்ள பணிகளில் ஒன்றாகும். அதன் எதிர்கால பாதுகாப்பு குறித்து பேச்சுவார்த்தைகள் தொடர்கின்றன. வெளிநாட்டுப் படைகள் வெளியேறிய பின்னர் ஒரு புதிய உள்நாட்டுப் போர் வெடிக்கக்கூடும் என்ற அச்சத்தின் மத்தியில் தலிபான் போராளிகள் டசன் கணக்கான மாவட்டங்களை ஆக்கிரமித்துள்ளனர்.

## சீனாவை அடிமைப்படுத்த முடியாது நூற்றாண்டு விழாவில் ஸி ஜின்பிங் தெரிவிப்பு

சீனாவை கொடுமைப்படுத்தவோ அல்லது செல்வாக்கு செலுத்தவோ வெளிநாட்டு சக்திகளால் முடியாது என சீனா ஜனாதிபதி ஸி ஜின்பிங் (Xi Jinping)தெரிவித்துள்ளார்.

இன்று ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியின் நூற்றாண்டு விழாவைக் குறிக்கும் நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் இதனை தெரிவித்தார். அமெரிக்காவை நோக்கியதாக பரவலாகக் காணப்படும் இந்த கருத்துக்களில், பெய்ஜிங் புனிதமான பிரசங்கத்தை அனுமதிக்காது எனவும் ஸி ஜின்பிங் (Xi Jinping) கூறினார்.

பெய்ஜிங்கில் உள்ள தியனன்மென் சதுக்கத்தில் 70,000 பேர் கொண்ட கூட்டத்திற்கு முன் ஆற்றிய உரையில், சீனாவை வறுமை மற்றும் அவமானத்திலிருந்து விடுவித்ததற்காக ஆளும் கட்சியைப் பாராட்டிய ஸி ஜின்பிங், சீனாவின் இராணுவத்தையும் செல்வாக்கையும் விரிவுபடுத்துவதாக உறுதியளித்தார்.

'எங்களுக்கு சொற்பொழிவு செய்ய உரிமை உண்டு என்று நினைப்பவர்களிடமிருந்து புனிதமான பிரசங்கத்தை நாங்கள் ஏற்க மாட்டோம். நாங்கள் ஒருபோதும் வேறு எந்த நாட்டினரையும் கொடுமைப்படுத்தவோ, ஒடுக்கவோ, அடிபணியவோ செய்யவில்லை, நாங்கள் ஒருபோதும் அதை செய்யமாட்டோம்.

அதே அடையாளத்தால்சீனாவை கொடுமைப்படுத்தவோ, ஒடுக்கவோ, அடிபணியவோ நாங்கள் யாரையும் அனுமதிக்க மாட்டோம். சீன மக்கள் தங்கள் தேசிய இறையாண்மையையும் பிராந்திய ஒருமைப்பாட்டையும் பாதுகாப்பதற்கான தீர்மானத்தையும் விருப்பத்தையும் திறனையும் யாரும் குறைத்து மதிப்பிடக்கூடாது.

சீனாவின் சகாப்தம் படுகொலை செய்யப்பட்டு கொடுமைப்படுத்தப்படுவது என்றோ போய்விட்டது. அதைச் செய்யத் துணிந்த எவரும் 1.4 பில்லியனுக்கும் அதிகமான சீன மக்களால் உருவாக்கப்பட்ட இரும்பு மாபெரும் சுவரை தாண்ட வேண்டும். சீன தேசத்தின் பெரும் புத்துயிர் மீளமுடியாத வரலாற்றுப் போக்கில் நுழைந்துள்ளது. சோசலிசத்தால் மட்டுமே சீனாவை காப்பாற்ற முடியும்' எனவும் சீனா ஜனாதிபதி ஸி ஜின்பிங் (Xi Jinping) கூறினார். இதேவேளை மனித உரிமை மீறல்கள் மற்றும் ஹொங்காங்கில் அதன் ஒடுக்குமுறை தொடர்பாக சீனா விமர்சனங்களை எதிர்கொள்கிறது. வர்த்தகம், உளவு மற்றும் தொற்றுநோய் தொடர்பாக அமெரிக்காவிற்கும் சீனாவிற்கும் இடையிலான உறவுகள் சமீபத்திய காலங்களில் மோசமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



© Li Xueren/XinHua/dpa/picture alliance

## கனடாவின் பல பகுதிகளில் வறட்சி: விவசாயிகள் கவலை!

கனடா- அல்பர்ட்டாவின் பல பகுதிகள் இந்த ஆண்டு கடும் வறட்சி ஏற்பட்டுள்ளதாக, விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

வறட்சி காரணமாக, பல இடங்களில், விரைவாக வளர வேண்டிய பயிர்கள் பழுப்பு நிறமாக மாறத் தொடங்குகின்றன. தற்போது பல விவசாயிகள் கடும் நஷ்டத்தை எதிர்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கல்கரி பகுதி ஜனவரி 1ஆம் திகதி முதல் அதன் சாதாரண மழையின் மூன்றில் இரண்டு பங்கைப் பெற்றுள்ளது. அதாவது, இதுவரை 117.7 மிமீ மழை வீழ்ச்சி என்று சுற்றுச்சூழல் கனடா தெரிவித்துள்ளது.



வறட்சி நிலைமை வெப்பத்துடன் தொடர்ந்து மோசமடைந்துவிட்டால், விவசாயிகள் தங்கள் மந்தைகளில் சிலவற்றை விற்க வேண்டிய கட்டாயம் ஏற்படலாம். இது மாகாணத்தில் ஆயிரக்கணக்கான விவசாயிகள் எதிர்கொள்ளும் ஒரு சவாலாக தற்போது மாறியுள்ளது.

அத்துடன் பன்றி வளர்ப்பாளர்கள், காற்றோட்டத்தை வைத்திருக்க களஞ்சியங்களில் பெரிய காற்றோட்டம் விசிறிகளை பொருத்தியுள்ளதாக அல்பர்ட்டா பன்றி வளர்ப்பாளர்கள் கூறுகின்றனர்.

கடந்த சில நாட்களுக்கு முன்னதாக கனடாவில், 49.5 பாகை செல்சியஸ் வெப்பநிலை பதிவாகியிருந்த நிலையில், அங்கு 486க்கும் மேற்பட்டோர் அதிக வெயில் காரணமாக உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கின்னஸ் சாதனைப் படைத்த 112 வயது தாத்தா

அமெரிக்காவின் வட கரோலினா மாகாணத்தில் 1908-ம் ஆண்டு பிறந்த மார்க்வெஸ் என்கிற 112 வயது நபர் உலகிலேயே அதிக ஆண்டுகள் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கும் நபர் என்ற சாதனையைப் படைத்துள்ளார்.



இதனை கின்னஸ் உலக சாதனைப் புத்தகம் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. இதுகுறித்துப் பெருமிதம் தெரிவித்துள்ள மார்க்கஸ், தனது வாழ்க்கை குறித்துப் பேசியதாவது: என்னுடைய தகப்பனார் எனக்கும் என்னுடன் பிறந்தவர்களுக்கும் நல்ல ஒழுக்கத்தையும் எண்ணங்களையும் விதைத்துச் சென்றுள்ளார். அனைவருக்கும் நம்மால் இயன்ற அளவு உதவி செய்து வாழவேண்டும் என்று கூறியுள்ளார். மேலும் கர்த்தர் என்னுடன் இருக்கிறார்.

அதனால்தான் நான் இன்னும் ஆரோக்கியமாக உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார். மார்க்கஸ் பெற்றோருக்கு மொத்தம் 11 குழந்தைகள் உள்ளனர். இரண்டாவது குழந்தையாக பிறந்த மார்க்கஸ் மூன்று ஆண்டுகள் மட்டுமே பள்ளியில் பயின்றுள்ளார். ரோமானியாவைச் சேர்ந்த டுமிட்ரு கோமானெஸ்கூ என்கிற 111 வயதான கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம் பிடித்த நபர் கடந்த ஆண்டு ஜூன் 27-ஆம் திகதி காலமானார். இதனையடுத்து இந்த சாதனையை மார்க்கஸ் கைப்பற்றியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## ஹோட்டல் உரிமையாளரை கொடூரமாக வெட்டி கொன்ற ஊழியர்!

திருப்பதியில் கொரோனா ஊரடங்கு காலத்தில் சம்பளம் வழங்காததால் ஹோட்டல் உரிமையாளரை தொழிலாளி வெட்டிக்கொலை செய்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

திருப்பதியை சேர்ந்தவர் வித்யாசாகர். (வயது52). காளஹஸ்தியை சேர்ந்தவர் வெங்கடேஸ்வரலு (53). இவர் ஹைதராபாத்தில் ஓட்டல் நடத்தி வந்தார்.

இவரது ஹோட்டலில் வித்யாசாகர் தங்கியிருந்து வேலை செய்து வந்தார். கொரோனா ஊரடங்கால் வியாபாரம் சுமாராக இருந்ததால் கடந்த 6 மாதமாக வித்யாசாகருக்கு வெங்கடேஸ்வரலு சம்பளம் வழங்கவில்லை என கூறப்படுகிறது.

வித்யாசாகர் குடும்பத்தினர் அவருக்கு போன் செய்து வீட்டு செலவுக்கு பணம் அனுப்புமாறு கூறியுள்ளனர். சம்பள பணத்தை வழங்குமாறு வித்யாசாகர் வெங்கடேஸ்வரலுவிடம் கேட்டு வந்தார்.

ஆனால் அவர் சம்பளத்தை வழங்காமல் நாள் கடத்தி வந்தார். இந்த நிலையில் வெங்கடேஸ்வரலு காளஹஸ்திக்கு வந்தார். வித்யாசாகரும் திருப்பதிக்கு வந்துவிட்டார். இதையடுத்து வித்யாசாகர் காளஹஸ்திக்கு சென்று வெங்கடேஸ்வரலுவிடம் சம்பளம் கேட்டுள்ளார்.

அப்போது அவர்களுக்குள் தகராறு ஏற்பட்டது. இதில் ஆத்திரமடைந்த வித்யாசாகர் வெங்கடேஸ்வரலுவை கத்தியால் வெட்டி கொலை செய்தார். பின்னர் அங்கிருந்து தப்பி ஓடி விட்டார். இதுகுறித்து காளஹஸ்தி பொலிஸார் வழக்குப்பதிவு செய்து வித்யாசாகரை தேடி வருகின்றனர்.


அண்மையில், சீனாவின் குவாங்சி சுவாங் இனத் தன்னாட்சிப் பிரதேசத்தின் லியு'சோ நகரின் சு'ரிய வட்டத்தில் மூங்கில் குறுத்துகள் அமோக விளைச்சலைப் பெற்றுள்ளன. விவசாயிகள் சுறுசுறுப்பாக அறுவடை செய்து, சந்தையில் விற்று வருகின்றனர். கடந்த சில ஆண்டுகளாக, இவ்வட்டத்தில் மூங்கில் குறுத்துகள் விளைச்சல் முன்னேற்றப்பட்டு வருகின்றது. தற்போது, இது உள்ளூர் விவசாயிகளின் வாழ்வாதாரமாக மாறியுள்ளது.







அண்மையில், பிரைய்டின் திமிங்கிலம் ஒன்று சீனாவின் ஷென்ச்சென் நகரின் மிரஸ் விரிகுடாவில் காணப்பட்டது. நிபுணர்களின் கண்காணிப்பின்படி, அதன் உடல் நீளம் சுமார் 8 மீட்டர். தற்போது அதன் உடல் நிலை ஆரோக்கியமாக உள்ளது. கடந்த பல நாட்களாக, இந்நகரின் தொடர்புடைய வாரியங்களைச் சேர்ந்த பணியாளர்கள் கடல் பரப்பில் கண்காணிப்பைத் தீவிரமாக மேற்கொண்டு வருகின்றனர்.


அண்மையில், கென்யாவின் ஈசியோலோ மாவட்டத்தில், ஒரு யானை புதை மண்ணில் சிக்கிக் கொண்டது. இயற்கை மூலவள பாதுகாவலர்கள் இந்த யானையை மீட்டெடுத்தனர். 34 வயதான கியரன் ஏவரி என்பவர், இக்குழுவைச் சேர்ந்த ஒரு விலங்கு மருத்துவர். அவர் தொலைப்பேசி மூலம் இச்சம்பவத்தை அறிந்து கொண்ட பிறகு உடனடியாக குழுவினர்களுடன் யானையை மீட்டு, காட்டிலே விட்டனர்.





கடல் சறுக்கு விளையாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஒருவரையும், இறங்கி வந்த பெரிய ஹெலிகாப்டரையும் இணைத்து ஒரே புகைப்படத்தில் எடுக்கப்பட்ட காட்சி !






இப்பத்திரிகை இலக்கம் 154A, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால்,04.07.2021அன்று வெளியிடப்பட்டது.